Registered as a Newspaper

விலை ரூபா 5-00

நல்லூர் ... மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 15 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 4 (17.3.94) வியாழக்கிழமை ஓசை 27

## யாழ். மாவட்ட பரீட்சை நகர எண்கள் மாற்றம்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குரிய யாழ். மாவட்ட பரீட்சை நகர எண்கள் அனைத்தும் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இம்மாற்றம் பரீட்சைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு யாழ். கல்வித்திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதிதாக இரண்டு பரீட்சை நகரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. கோப்பாய், சாவெட்டி ஆகிய இரண்டுமே புதிய பரீட்சை நகரங்களாகும். இதன் விபரம் வருமாறு: யாழ்ப்பாணம் - 102, சாவகச்சேரி - 103, கோப்பாய் - 104, சாவெட்டி - 105, பருத்தித்துறை - 106, தெல்லிப்பழை - 107 எனவும் மாற்றப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் யாழ்ப்பாணம் - 48 (6ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கை பிரிப்பதற்கு வாக்கெடுப்புத் தேவையில்லை!

## ஜனாதிபதியின் அதிகாரங்களே போதும் என ஆலோசனை கூறுகின்றன எதிர்க்கட்சிகள்

(கொழும்பு)

தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்கு சர்வசன வாக்கெடுப்பொன்று தேவையில்லை. ஜனாதிபதியின் விசேட அதிகாரங்களே போதுமானவை. இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஏனைய எதிர்க்கட்சிகள் சிலவும், சில பௌத்த - சிங்கள அமைப்புக்களும் தெரிவித்துள்ளன.

நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கும் வேளையில் செய்துகொள்ளப்பட்ட சிறிலங்கா இந்திய சமாதான உடன்படிக்கையின் மூலம் இணைக்கப்பட்ட இப்பிரதேசங்களை பிரிப்பதற்கு சர்வசன வாக்கெடுப்பு தேவையில்லை என எதிர்க்கட்சிகளும், பௌத்த சிங்கள அமைப்புக்களும் குறிப்பிட்டுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா, மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஷ் குணவர்த்தனா, சிறிசுமன விகாரபதி மதுலுவாவே சோபித தேரோ, டாக்டர் குணதாச அமரசேகரா, சிங்கள பாதுகாப்பு அமைப்பின் தலைவர் காமினி ஜெயசூரியா ஆகியோரே இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## புலிகளுடன் பேச்சு நடாத்த அமைச்சர் மூன்று நிபந்தனைகள்

(கொழும்பு)

மூன்று நிபந்தனை அடிப்படையிலேயே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அவ்வாறு இல்லாத எந்த ஒரு சூழ்நிலையிலும் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராக இல்லை எனவும் அமைச்சர் ... டிரோன் ... பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பத்திரிகையாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் மேற்படி கருத்தை தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்; சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறும் இடத்து சகல தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழ்க்குழுக்களும் கலந்து ... யாக நிறுத்தவேண்டும் எனவும் மற்றும் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் நேரடியாக கலந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். இந்த சூழ்நிலையில் மட்டுமே பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்றும் இவ்வாறு இல்லாத எந்த ...

### ஜனாதிபதி தேர்தலுக்காக

## க.பொ.த (சா/த) பரீட்சை பின்போடப்படமாட்டாது

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தரப்பரீட்சை ஜனாதிபதி தேர்தலுக்காக பின்போடப்படமாட்டாது. பரீட்சை திட்டமிட்டபடி உரிய காலத்தில் நடைபெறும் என கல்வி கலாசாரத்துறை அமைச்சர் லொக்குபண்டார தெரிவித்தார்.

பரீட்சைத் திகதிகளை கவனத்தில் கொண்டே தேர்தல் ஆணையாளர் தேர்தலுக்கான திகதியை நிர்ணயிப்பார். எந்தக் காரணம் கொண்டும் பரீட்சை பாதிக்கப்படமாட்டாது. இதன் காரணமாக சில சமயம் ஜனாதிபதி தேர்தல் உரிய காலத்திற்கு முன்பே நடைபெறலாம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

### புலிகளின் தாக்குதலின் எதிரொலி

## ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளை சுருக்குவது பற்றி ஆராய்வு

(கொழும்பு)

வட பகுதியில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் அதிகரித்திருப்பது குறித்து இராணுவ வட்டாரங்களில் ஆராயப்பட்டுவருவதாகவும் இதற்காக சில மாற்று யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதன் பிரகாரம் இராணுவம் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ள மக்கள் நடமாட்டம் குறைந்த பகுதிகளிலிருந்து இராணுவத்தை வாபஸ் வாங்குவது குறித்து ஆராயப்பட்டுவருவதாகவும் தெரியவருகின்றது

இது தொடர்பாக இராணுவ உயர்மட்ட மாநாட்டில் தீவிரமாக ஆராயப்பட்டபோதும் இராணுவத்துடன் இணைந்து செயற்படும் தமிழ்க் குழுக்கள் விரும்பவில்லை எனவும் தெரியவருகிறது

இவர்களின் விருப்பத்திற்காக பொதுமக்களே இல்லாத பகுதிகளில் இராணுவத்தை முடக்கிவைத்திருப்பது பிரயோசனமற்றதென உயரதிகாரிகள் கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புத்தளம் கடற்பரப்பில் 5மீனவர் தாக்குதலுக்குபலி

### பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

புத்தளம் மன்னார்மாவட்ட எல்லைக்கப்பால் கதிரமலை கடலில் விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை நடத்திய (6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. மனித உரிமைகள் குழு போர் நிறுத்தத்திற்கு கோர வேண்டும்

வாறு இல்லாத எந்த ஒரு சூழ்நிலையிலும் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராக இல்லை எனவும் அமைச்சர் டிரோன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைந்து கூறுகையில்; சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறும் இடத்து சகல தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழ்க்குழுக்களும் கலந்து கொள்ள வேண்டுமென்றும், விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கைகளை முழுமை வேண்டும் என்றும் அவர் கூறினார் இந்த சூழ்நிலையில் மட்டுமே பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்றும் இவ்வாறு இல்லாத எந்த சூழ்நிலையிலும் பேச்சுக்கள் நடைபெறமாட்டாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்

# போர் நிறுத்தத்திற்கு கோர வேண்டும்

## மனிதாபிமான சட்ட அமைப்பு கோரிக்கை

(ஜெனீவா)

போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சிறிலங்கா அரசையும் புலிகள் இயக்கத்தையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்திக் கேட்க வேண்டும் எனக் கோரும் அறிக்கையொன்றை மனிதாபிமான சட்ட அமைப்பு என்ற அரசசார்பற்ற இயக்கம் ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 50ஆவது கூட்டத்தொடரில் விநியோகித்திருக்கின்றது.

தமிழ் தாயகத்தில் சகல வகையான குண்டு வீச்சுகளும் நிறுத்தப்பட வேண்டும் என்றும் வடபகுதி மீது சிறிலங்கா அரசினால் விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத்தடை உடனடியாக நீக்கப்பட வேண்டும் எனவும் மனித உரிமைகள் ஆணைக்குழு கோர வேண்டும் சர்வதேச மத்தியஸ்தம் இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழ் தாயகத்தின் ஒருமைப்பாட்டை மதிப்பதாக அமைய வேண்டும் அத்துடன் தமது அரசியல் அந்தஸ்தை சுதந்திரமாக தீர்மானிப்பதற்கான தமிழர்களின் உரிமையை அங்கீகரிக்கவும் வேண்டும் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# சமரச முயற்சிகள் குறித்து அரசுக்கு அக்கறையில்லை

## கொழும்பு சஞ்சிகை கூறுகிறது

இனப்பிரச்சினை தொடர்பான சிறிலங்கா ஜனாதிபதி விஜேதுங்கவின் பேச்சுகள் அப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து சிந்திப்பவர்களிடையில் குழப்ப நிலையை ஏற்படுத்துகிறது. அத்துடன் சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களின் கருத்துகளையும் அரசு கவனத்தில் எடுப்பதில்லை என கொழும்பு சஞ்சிகை ஒன்று தெரிவிக்கின்றது.

ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள், எம் பிக்கள் வடக்கு-கிழக்கு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டிய அவசியத்தை நன்கு உணர்ந்துள்ளனர். ஆனால் ஜனாதிபதியின் அண்மைய கருத்துகள் அப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து சிந்திப்பவர்களிடையில் குழப்ப நிலையை ஏற்படுத்துகிறது எனவும் அச் சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீரச்சாவு



வீரவேங்கை
சுவேந்திரன்

மட்டக்களப்பு மாவட்டம் புளுட்டுமானோடைகாட்டுப் பகுதியில் கடந்த 11ஆம் திகதியன்று விடுதலைப்புலிகளின் முகாமொன்றைச் சுற்றிவளைக்கும் நோக்கத்துடன் சென்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேரடி மோதலொன்று இடம்பெற்றது.

இம்மோதலில் விடுதலைப் புலிகள் போராளி வீரவேங்கை சுவேந்திரன் (கந்தசாமி துரைசிங்கம் எருவில் களுவாஞ்சிக்குடி) என்பவர் வீரச்சாவடைந்தார் இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# தொடர் தாக்குதல்களுக்கு பிரபாகரன் உத்தரவாம்

(கொழும்பு)

அரசபடைகளின் மீது தொடர் தாக்குதல்களை மேற்கொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது பிராந்திய தளபதிகளைப் பணித்துள்ளதாக பாதுகாப்பு புலனாய்வாளர்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்று வரும் தாக்குதல்கள் தலைவரின் பணிப்பை தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாக நம்பப்படுகின்றது புதிய தாக்குதல்களுக்காக புலிகள் சுமார் 500 பேரை ஈடுபடுத்தியிருப்பதாகவும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# எறிகணை வீச்சுக்கு தூக்கத்திலிருந்தவர் காயம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை குடியிருப்புகள் மீது பலாலி இராணுவ முகாமிலிருந்து இரவு நேர ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றன இத் தாக்குதலுக்கு இலக்காகி ஒரு குடும்பத்தலைவர் காயமடைந்தார் இரண்டு வீடுகள் சேதமடைந்தன. வீட்டுப் பொருள்கள் நாசமடைந்தன

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு 11.20 மணியளவில் நடைபெற்றது இத்தாக்குதலின்போது அப்பகுதியைச் சேர்ந்த இ. மகேந்திரன் (வயது 51) என்பவர் முதுகில் சிறுகாயமடைந்தார் இவரது கை நித்திரையிலிருந்த மூன்று பிள்ளைகள் காயமெதுவுமின்றித் தப்பிக்கொண்டனர். இவர்களது வீடும் சேதமடைந்தது இக்குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஏவப்பட்ட இரண்டாவது ஆட்லறிஷெல்லுக்கே இவர் காயமடைய நேர்ந்தது

முதலாவது ஆட்லறிஷெல் அப்பகுதியில் சுந்தரம் என்பவரது வீட்டைச் சேதப்படுத்தியது வீட்டு மதில் உட்பட உடைமைகளும் நாசமாகின

இதேவேளை நேற்று முன்தினமிரவு 7.30 மணியளவில் உலங்குவானூர்தி ஒன்று பலாலி முகாமுக்கு வருவதும் போவதுமாகக் காணப்பட்

(6ஆம் பக்கம் பார்க்க)

# கோமாரி நாளை வரும்

கோமாரி கப்பல் அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் நாளை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கப்பலில் 2000 மெற்றிக் தொன் அரிசி, 950 மெற்றிக் தொன் சீனி, 150 மெற்றிக் தொன் பருப்பு மற்றும் பால்மா தானிய வகைகளும் எடுத்து வரப்படுவதாக புனர்வாழ்வு பகுதி தெரிவித்துள்ளது. (சி)

# ஆலங்கேணி கரையில் உலங்குவானூர்தி தாக்குதல்

(ஆலங்கேணி)

ஆலங்கேணிக் கடற்கரைப் பகுதி மீது சிறிலங்கா வான்படையினரின் உலங்குவானூர்தி ஒன்று தாக்குதல் நடாத்தியுள்ளது.

நேற்று முன்தினம் மாலை மேற்படி பகுதியில் கூடியிருந்த பயணிகளை நோக்கியே இத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இத்தாக்குதல் காரணமாக இப்பகுதியில் தரித்து நின்ற பயணிகள் பீதியடைந்து பாதுகாப்பான பகுதிகளை நாடிச்சென்றனர். இத்தாக்குதலின் போது எதுவித சேதமும் ஏற்படவில்லை. (க.நி)

# யாழ்பல்கலை அடுத்த துணைவேந்தர்; குணரட்ணம் நியமனமாவார்

(கொழும்பு)

யாழ்.பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தர் பதவி பேராசிரியர் குணரட்ணத்துக்கு வழங்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாக உள்ளதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பல்கலைக் கழகத்தின் அடுத்த துணைவேந்தர் பதவி யாருக்கு வழங்கப்படும் என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படாவிட்டாலும் இவ் விடயம் குறித்து உத்தியோகபூர்வமற்ற பல தகவல்கள் கொழும்பிலிருந்து வெளியாகி வருகின்றன.

யாழ் பல்கலைக்கழகத்தின் பேரவையினால் தெரிவு செய்யப்பட்ட மூவரது பெயர்ப் பட்டியல் ஏற்கனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது இப்பட்டியல் குறித்து மானியங்கள் ஆணைக்குழு ஆராய்ந்துள்ளது கடந்த 12ஆம் திகதி மானியங்கள் ஆணைக்குழு கூடியபோது மேற்படி விடயம் பரிசீலிக்கப்பட்டது. இக் கூட்டத்தில் மேற்படி பெயர்ப் பட்டியலில் முதலாவதாகக் காணப்பட்ட பேராசிரியர் குணரட்ணம் அவர்கள் பல்கலைக் கழக மானியங்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஏப்ரல் முதல்வாரத்தில் தாதிகள் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள தாதிமாரின் நாடுதழுவிய வேலை நிறுத்தத்தில் சிறைச்சாலைவைத்திய நிலையத் தாதிகளும் சேரவுள்ளனர்

சிறைச்சாலை வைத்திய நிலையத் தாதிகளை சுகாதார அமைச்சில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கோரியே அவர்களும் இந்த வேலை நிறுத்தத்தில் சேர உள்ளனர் என்று அரச சேவைகள் ஐக்கிய தாதிகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**காருண்யா சைனீஸ்**

உத்தியோகஸ்தர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். மதிய உணவு--மீன், இறைச்சி, முட்டை, மரக்கறிப் பாசல்கள் உங்கள் இடங்களுக்கு டெலிவரி (Delivery) செய்யப்படும். விபரங்களுக்கு: KARUNYA CHINESE, 166 1st Cross Street Jaffna. (பாடசாலை வைபவ ஓடர்கள் சகாயவிலையில்) (7718)

**என்றும் எமக்கு மரணமில்லை**

தாய்நாடு காக்கும் போரில் (1941-1945) பங்குபற்றி உயிர்நீத்த சோவியத் கவிஞர்களின் கவிதைகள் விற்பனையாகிறது. யாழ்- வசந்தம், தமிழ்த்தாய் புத்தகசாலை. (7745)

**தேவை**

நோயாளி தள்ளுகதிரை தேவை: வைத்திருப்பவர்கள் நேரிலோ கடிதமூலமோ உடன் தொடர்பு கொள்ளவும். செ- சின்னராஜா 14/1, சுச்சமோட்டை கடற்கரை வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்- (7754)

**விற்பனைக்கு**

புடவைக் கடைக்கும், அழகுசாதனக் கடைக்கும் தேவையான தளபாடங்கள் விற்பனைக்குண்டு நேரில் பார்வையிடலாம்: தொடர்பு, நியூ சலெஞ்சர், கண்டி வீதி, சாவகச்சேரி, (தெய்வேந்திரா படமாளிகை முன்பாக) (7767)

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி சங்கத்தானை கண்டி வீதிக்கருகாமையில் 5 பரப்புக்காணி. சிறிய சிமெந்துக்கிணறு நன்னீர் கிணறு, மலசல கூடம் உண்டு. தொடர்புகொள்ளும் முகவரி: நாதன் கல் பாரி, சங்கத்தானை சாவகச்சேரி. (7763)

**தவறிவிட்டது**

க. ஸ்ரீகாந்தன் 02601128 56 என இலக்கமிடப்பட்ட இலங்கை வங்கி காசோலை (DRAFT) யாழ் மாநகரசபை எல்லைக்குள் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் கொண்டு வந்து தரவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. ஸ்ரீகாந்தன் இல. 148, நவீன


## ஆசிரிய இடமாற்றம் பற்றி தேசிய கொள்கை அமைவு

(நல்லூர்)

ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக கல்விச் சேவையால் வெளியிடப்பட்டுள்ள இடமாற்றச் சுற்றறிக்கையைப் பயன்படுத்தி தேசியக் கொள்கையொன்று கல்விச் சபையினால் வகுக்கப்பட்டுள்ளதாக வடக்குக்கிழக்கு மாகாண கல்வியமைச்சு சகல மாகாண மாவட்டக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது. இதனைப் பின்பற்றுமாறும் அது இவர்களைப் பணித்துள்ளது

இதன்படி 91/7 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஆசிரியர்களால் தயாரிக்கப்படும் இடமாற்ற விண்ணப்பப்படிவத்தில் உரிய அதிபரின் கையொப்பத்துடன் உரிய கோட்டத்துக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளரின் உறுதிப்பாட்டுடன் மாகாண கல்விப்பணிப்பாளரினூடாக மாகாணக் கல்விச் செயலருக்குஉரிய ஆசிரியஇடமாற்ற விண்ணப்பப்படிவம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்

இடமாற்றம் வழமையாக ஆண்டிறுதியிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் ஆனால் மிகவிசேட சந்தர்ப்பத்தில் மட்டும் பாடசாலைகளின் தவணைப் பரீட்சை முடிவில் மேற்கொள்ளப்படலாம் ஒரு ஆசிரியர் இடமாற்றம் பெற்றால் அதற்கு முன்னர் அவருடைய இடத்துக்கு பதில்ஆசிரியர் கட்டாயம் நியமிக்கப்பட வேண்டும்.

வெளி இடங்களில் சேவையாற்றிய ஆசிரியர்கள்: கஷ்டப் பிரதேசங்களில் இரண்டு வருடம் சேவையாற்றிய ஆசிரியர்கள் கணவன் மனைவியாக உள்ள ஆசிரியர்கள் ஒரே இடத்தில் சேவையாற்ற விரும்பின் கடுமையானநோய் காரணமாக வைத்தியசாலையின் சிபார்சு செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தேசிய பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் இடமாற்றம் பெற விரும்பினால் விசேட சபை ஒன்றினால் தகுதியான ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் இச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

## இன்றைய நிகழ்வுகள்

கொக்குவில் மேற்கு அடைக்கலநாயகி கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்திற்கான புதிய உத்தியோகஸ்தர்தெரிவு கடற்றொழில் அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. இராதாகிருஷ்ணன் அவர்களின் மேற்பார்வையில் கிராமசேவகர் பணிமனையில் இன்று மாலை 3-00 மணிக்கு இடம் பெறவுள்ளது.


ஓம் வீராட் விஸ்வ பிரம்ம நம!

**நகைத் தொழிலாளர் சங்கம் யாழ் மாவட்டம்**

அன்புடையீர்!

யாழ் மாவட்ட நகைத்தொழிலாளர் சங்கத்தின் முதலாம் ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தேர்வும்

இடம்:- யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபம்

காலம்:- 26 03-1994 சனிக்கிழமை

நேரம்:- பிற்பகல் 2. 30 மணி


## கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரியாலை சாம்சன் குடியிருப்பில் வசிக்கும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட, வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மக்களில் கண்பார்வை, காது கேட்டல் குறைபாடுகள் உள்ளவர்கள் பற்றிய விபரங்களோடும் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தோடும் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு மேற்படிபிரிவு கிராம சேவையாளர்கள் குடியிருப்பு நிர்வாகத்தினருக்கு அறிவித்துள்ளனர். இக் குடியிருப்பில் சுமார் ஐம்பது பேர் வரை பிரஸ்தாப குறைபாடுகளை உடையவர்களாக உள்ளனர் என குடியிருப்பு நிர்வாகத்தினர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (22)

## கலை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இயங்கும் சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காவின் 'மாதாந்த கலைநிகழ்ச்சியும் கூட்டமும்' 15-ம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்றன: பூங்கா நிர்வாகி திரு. மு. நடேசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தீவகக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. செம்மணன், தீவகக் கோட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு. ப. கனகலிங்கம், கிராம சேவையாளர் திரு. நடராசா பொது சுகாதார பரிசோதகர் திரு. ரவீந்திரன் ஆகியோர் சிறப்புரைகள் வழங்கினார்கள். பூங்கா சிறார்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. (22)

## சட்டவிரோத மரம் தறிப்பு நீதிமன்றம் தண்டிப்பு

(தென்மராட்சி)

மரங்கள் தறிப்பதைக் கட்டுப்படுத்தும் சட்டத்தின் கீழ் சட்டப்படி முன் அனுமதி பெறாது மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் பகுதியில் மரமொன்றை தறித்த நபரொருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

தமிழீழ காவல்துறையினால் மன்றில் முற்படுத்தப்பட்ட இவருக்கு மரத்தின் பெறுமதியான 5000ரூபாவுடன் 15,000ரூபா அபராதம் செலுத்தும்படி பணிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். (86)

## உ/தர வகுப்பில் கற்பிக்காத ஆசிரியர் விபரம் சேகரிப்பு

(நல்லூர்)

பட்டதாரி ஆசிரியர்களாக பாடசாலைகளில் நியமிக்கப்பட்டு கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களில் சிலர் க. பொ. த. உயர்தர வகுப்புக்களில் கற்பிக்காமல் அதற்குக் கீழுள்ள வகுப்புக்களிலும் க. பொ. த. உயர்தர வகுப்புகள் இல்லாத பாடசாலைகளிலும் தற்போது கடமை புரிகின்றார்கள். எனவே இவர்கள் பற்றிய விபரங்களை உடன் தமக்கு அனுப்பிவைக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு சகல மாவட்ட கோட்டக் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் கோரியுள்ளது.

இவ்விபரங்களில் பட்டதாரி ஆசிரியர்களாக உள்ளோரில் ஆசிரிய ஆலோசகர்களாக உள்ளோர், திட்டமிடல் பணிக்கு நியமிக்கப்பட்டுக் கடமையாற்றுவோர், ஆரம்பபாடசாலைகளில் கற்பிப்போர் இடைநிலைப் பாடசாலைகளில் கற்பிப்போர் இடமாற்றம் பெற விரும்பும் பட்டதாரி ஆசிரியர்கள் ஆகிய விபரங்கள் இடம்பெற வேண்டுமென அமைச்சு கோரியுள்ளது. (17)

## முகாம் சுத்திகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை தொடக்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 'மலேரியா தடுப்புவாரத்தை' யொட்டி யாழ் மாநகர சபை சுகாதாரப் பகுதியினரால் அரியாலை சாம்சன் குடியிருப்பில் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிரமதானம் மூலம் 'முகாம் சுத்திகரிப்பும்' தொடர்ந்து 21ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு மலேரியா தடுப்பு பற்றிய கருத்தரங்கும் இடம்பெறுமென பொது சுகாதார பரிசோதகர் திரு. இ. சந்தவனம் தெரிவித்தார். (22)

## வலய மட்டப் போட்டியில் தெரிவான அணிகள்

(வடமராட்சி)

யாழ் மாவட்டத்தில் கோட்ட மட்டத்தில் நடைபெற்றுவரும் உடற்பயிற்சி விளையாட்டுப் போட்டிகளில் முதலாம் இரண்டாம் இடங்களில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு அணிகள் எதிர்வரும் 20ஆம் திகதி புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியில் வலய மட்டத்தில் போட்டியிடவுள்ளன

வலய மட்டத்தில் போட்டியிட்டு முதலாம் இடத்தை தெரிவு செய்யும்விளையாட்டு அணிகள் மாவட்ட மட்டத்தில் விளையாட தெரிவு செய்யப்படுவர்

பருத்தித்துறை கோட்ட மட்டத்திலான உடற்பயிற்சி விளையாட்டுப்போட்டிகடந்த திங்கள் பருத்தித்துறை உதவிக்கல்விப் பணிப்பாளர்

17 வயது ஆண்கள் பிரிவில் முதலாம்இடத்தை ஹாட்லிக் கல்லூரியும் இரண்டாவது இடத்தை புலோலி மெ. மி. த கலவன் பாடசாலையும் பெற்றன

பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை வட இந்துமகளிர் கல்லூரியும் இரண்டாம் இடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும், மூன்றாம் இடத்தை வல்வெட்டித்துறை மகளிர் மகா வித்தியாலயமும் பெற்றன

19 வயது பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை வல்வெட்டித்துறை மகளிர் மகாவித்தியாலயமும், இரண்டாம் இடத்தை வட இந்துமகளிர் கல்லூரியும் முறையே பெற்றன இப்போட்டியில் 27 அணிகள் மட்டும் கலந்துகொண்டன, (பேபா)

## நினைவு கூருகின்றோம்...

**1994-03.17**

1987ஆம் ஆண்டு, இதே தினத்திற் வீரச்சாவெய்திய.

**சொர்ணம்** (மூத்தான் சிவசரணம் - முப்பதேக்கர் மூதூர் - திருமலை)

மட்டு - நிந்தவூர், அட்டப்பள்ளம் பகுதியிற் தேசவிரோதக் குழுவினர் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். லவன்** (செல்லப்பா பாக்கியநாதன் -அட்டப்பள்ளம் - நிந்தவூர் - மட்டு)

யாழ் - கைதடி, நாவற்குழிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.ஜீவா - கேதீஸ்** (திருச்செல்வம் விஜயானந்தன்- 211-2, பிரதான வீதி, குருநகர்-யாழ்)

1988ஆம் ஆண்டு செட்டிப்பாளையத்தில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு தேசவிரோதிகளினால் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த,

**ரமணன்** (கணபதிப்பிள்ளை இலட்சுமணன் - பொத்துவில் - 03 - அம்பாறை)

மட்டு - மணற்பிட்டியில் தேசவிரோதிகளினால் கைது செய்யப்பட்டு இந்தியப்படையினரால் அடித்துக் கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த,

**றிஸ்வான்** (மாமங்கம் தெட்சணாமூர்த்தி - திருப்பழுகாமம் - மட்டு)

1989ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் (?) வீரச்சாவெய்திய-

**பரமேஸ்** (குணரத்தினம் பரமேஸ்வன் - தம்பலகாமம் - திருகோணமலை)

1992ஆம் ஆண்டு மணலாறு - கொக்குத்தொடுவாய் முகாமிலிருந்து 'ஒப்பரேசன் ஜயபரா' நடவடிக்கையினை மேற்கொள்ளும் முகாமாக வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். செம்மணச் செம்மல் - குரு** (வீரசிங்கம் ஜெயராசா - நாவிதன்வெளி-அம்பாறை)

**2-ம் லெப். புவியழகன்** (லூயிஸ் சாந்துள்- மாமாங்கேணி, வாழைச்சேனை - மட்டு)

**2-ம் லெப். தங்கப்பன்** (கந்தையா சுவேந்திரன்- மாங்கேணி-வாழைச்சேனை)

**2-ம் லெப். தகையான்-தாஸ்** (ஆரெத்தினவால்

நதன் இல. 148, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(7776)

## அனுமதி அட்டைகள் தபாலில் சேர்ப்பு

அரச, மாகாண சேவையின் பொது எழுதுனர் சேவையின் வகுப்பு 2 ஆ பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்மகாண் பரீட்சை கிராமசேவகர் தரம் உரிவுக்கான பரீட்சை கூட்டுறவு சங்க பரிசோதகர்களுக்கான ஆட்சேர்ப்பு பரீட்சை என்பன எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள்யாவும் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டு விட்டதாக யாழ் கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி அறிவித்துள்ளார்.

## அலுவலகம் திறப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப்பகுதியினர் தமது வேலைத் திட்டங்களை முல்லைத்தீவு மாவட்டத்தில் விரிவுபடுத்தும் நோக்கமாக ஒட்டுசுட்டான் வட்டத்திலுள்ள கருவேலன் கண்டல் கிராமிய உற்பத்திக்குழுப் பகுதியில் புதிய அலுவலகமொன்றை கடந்த மாத இறுதியில் திறந்து வைத்துள்ளனர்.

இத் திறப்பு விழா நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் தேசியக் கொடியை ஏற்றிவைக்க முல்லை மாவட்ட பொதுநிர்வாக தொடர்பகப் பொறுப்பாளர் சம்பிரதாயபூர்வமாக அலுவலகத்தை திறந்து வைத்தார். இப் புதிய அலுவலகம்திறக்கப்பட்டுள்ளமையினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் உட்கட்டுமானப்பகுதியின் வேலைத் திட்டங்கள் முனைப்புப்பெறும் எனக் கருதப்படுகின்றன.

நேரம்:- பிற்பகல் 2. 30 மணி

சகல நகைத் தொழிலாளர்களும் இவ் வருடாந்த பொதுக்கூட்டத்திலும் புதிய நிர்வாக தெரிவிலும் கலந்து சங்க நலனை முன்னெடுத்து ஒத்துழைப்பு நல்குமாறு சங்கத்தின் சார்பில் அன்புடன் அழைக்கின்றோம்,

நன்றி

யாழ் மாவட்ட நகைத் தொழிலாளர் சங்க நிர்வாகிகள்
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி-8853)

## மூன்றாம் ஆண்டுநினைவு அஞ்சலி



### லெப்டினன்ட் சோமன்

(செல்வன் விநாயகமூர்த்தி இராசேந்திரன்)

| மலர்வு | வீரச்சாவு |
| --- | --- |
| 02 . 11 . 1975 | 20 . 03 . 1991 |

திதி 17 . 03 . 1994

மன்னார் மாவட்டம் சிலாவத்துறை சிறிலங்கா இராணுவ முகாம் தாக்குதலின் போது இவருடன் வீரச்சாவடைந்த 82 மாவீரர்களுக்கும் எமது அஞ்சலி உரித்தாகுக.

கல்வயல்
சாவகச்சேரி.

சோமன் குடும்பத்தினர்

(சி-8851)

உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு ஆ. இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது

இவ்விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம் முதலாம் இடத்தையும் ஹாட்லிக் கல்லூரி இரண்டாம் இடத்தையும் கலட்டி றோக ஆண்கள் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றது

பெண்கள்பிரிவில் வட இந்து மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும் வல்வெட்டித்துறை மகளிர் மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், தொண்டமானாறு வீரகத்தி மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றன

மட்டும் கலந்துகொண்டன,

(யோ)

## நிர்வாகி தெரிவு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறை பிரிவில் அண்மையில் நடந்தேறிய பிரிவுக்கான நிர்வாகசபைக்கு பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் தலைவராகவும், திரு. சி ஆர் சிவநாதன் (பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை) உபதலைவராகவும், திரு. பி இரகுநாதன் (அதிபர் புலோலிமகாவித்தியாலயம்), பொருளாளராக திரு. இம்மனுவல் ஜோசப் (சீமெந்துக் கூட்டுத்தாபனம்) மேலும் ஐந்து நிர்வாகசபை உறுப்பினர்களும் தங்கள் நியமனப் பத்திரத்தினை தாக்கல்செய்துள்ளார்கள்

## பதவி வெற்றிடம்

### மகளிர் இணைப்பாளர் பதவி

யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் எல்லைப்பரப்பிலுள்ள தகைமையுடைய பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து மகளிர் இணைப்பாளருக்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன மகளிர் குழுக்களை அமைத்தல், பயிற்சியளித்தல், சுய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல் ஆகியவற்றை கொத்தணி மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் செயற்படுத்தக்கூடிய திறமையுள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும்

தகைமை

க. பொ. த. ப சாதாரணதரச் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பொதுசனத் தொடர்பு வேலைகளில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

அல்லது

க. பொ. த. ப. உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் 21-3-94 திங்கட்கிழமை காலை 8-00 மணிக்கு. இல. 572, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கூட்டுறவுத் திணைக்களத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்,

பொது முகாமையாளர்
யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கொத்தணி, (சி-8852)

2-ம் லெப். தமையான்-தாஸ் (ஆறிரத்தினவால் சிறி ஆரியதிலக - விபுலானந்தர் வீதி-மட்டு)

2-ம் லெப். ஆண்டகை (சிவசுந்தரம் கணேசகுமார் - கும்புறுப்பிட்டி - திருகோணமலை)

2-ம் லெப். இளஞ்சேரலாதன் (கனகசபை கணேஷ்குமார் - மத்திய வீதி, - திருகோணமலை)

கப்டன் குகனேஸ்வரன் -சுசீலன் (அந்தோனி ஸ்ராலின் - கிலாவத்தை - முல்லைத்தீவு)

இராமநாதன் (சிவலிங்கம் சிவபாலன் -பாரதிபுரம் கிளிநொச்சி)

கூர்வேல் சுந்தரப்பிள்ளை விஜயகுமார் - முறிகண்டி கிளிநொச்சி)

லெப். கில்மன் (அரியரத்தினம் பிரதிப்குமார் -குரும்பசிட்டி, தெல்லிப்பளை - யாழ்)

2-ம் லெப். இராசன் (அல்லிபுரம்கேமராசா இராசவீதி, கோப்பாய் மத்தி - யாழ்)

இளங்குன்றன் (அப்புலிங்கம் ஜெகதீஸ்வரன்-பாரதி வீதி, பத்தைமேனி - அச்சுவேலி)

ஞானி (இராசரத்தினம் வைகுந்தன் -தெருமூடி, அல்வாய் வடக்கு - பருத்தித்துறை)

மட்டு- கொக்கட்டிச்சோலை. முந்திரிகைப்பள்ளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது ஏற்பட்ட கடும் சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன் சேது (சின்னத்துரை ரவிச்சந்திரன் - கோயில் போரதீவு - மட்டு)

லெப். தீபன் (சுந்தரம் சுதாகரன் - தாண்டவன் வெளி - மட்டு)

2-ம் லெப். விதுரன் (கந்தையா ஜீவா - லுணுகலைத் தோட்டம் - பதுளை - மலையகம)

1993 ஆம் ஆண்டு மட்டு மாவட்டத்தில் எதிர் பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த-

நவமுரளி (திருத்தணிகாசலம் விமலதாஸ் - களுவங்கேணி-மட்டு)

திருமலை - சாம்பல்தீவுப்பாலத்தடியிற் சிறிலங்கா இராணுவத்தினர் சூட்டில் பலியான சாம்பல் தீவைச் சேர்ந்த தமிழ் மகன் ஒருவர்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்துசெயற்பட்டவராவர்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-8849)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



# குண்டுவீச்சால் பாதிப்புற்ற மக்கள் விபரம் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காப் படையினர் குடாநாட்டில் நடாத்திவரும் குண்டுத் தாக்குதல்களால் பொதுமக்கள் கொல்லப்பட்டும் காயப்பட்டும் வருகின்றனர். இவ்வாறு இவ்வாண்டு கொல்லப்பட்டவர்களதும், காயப்பட்டவர்களதும் விபரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அரசுக்கு சமர்ப்பிக்கவுள்ளார்.

இதற்கான அறிக்கைகள் மாதாந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டு வருகிறது. இம்மாத இறுதியில் கொழும்பு செல்ல இருக்கும் யாழ். அரச அதிபர் மேற்படி அறிக்கையை தம்முடன் எடுத்துச் செல்வார். இவ்வறிக்கை பாதுகாப்பு அமைச்சு மற்றும் புனர்வாழ்வுப்பிரிவு, ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றுக்கு சமர்ப்பிக்கப்படும் என்று தெரியவருகிறது.

(க) (நி)

## நரோமா கப்பல் பயண ஒழுங்கில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நரோமா கப்பல் மூலம் பயணம் செய்ய பெயர் பதிவு செய்த பயணிகளுக்கான பயண ஒழுங்குகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அரச அதிபரின் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

இம்மாற்றத்தின்படி வரும் 29ஆம் திகதி நரோமா கப்பல் மூலம் பயணம் செய்ய நிச்சயப்படுத்திய பயணிகள் வரும் 26ஆம் திகதியே இங்கிருந்து புறப்படுவரெனவும், 24ஆம் திகதி பயணம் செய்வதற்கு பெயர் பதிந்த பிரயாணிகளின் பெயர்ப் பட்டியல் இரண்டு மூன்று நாட்களில் தயாரிக்கப்பட்டுவிடும் என அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ), (ச)

## கப்பல் பயணிகள் பொருள் படையினரால் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

நரோமா கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்து கொண்டிருந்த பயணிகளிடமிருந்து பல பொருள்களைச் சிறிலங்காப் படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப்பைகள் மற்றும் சொக்லட் வகைகள், மருந்துப் பொருள்கள் ஆகியவற்றையே படையினர் பயணிகளிடமிருந்து பறிமுதல் செய்துள்ளனர். இவ்வாறான பொருள்களை எடுத்து வந்தவர்கள் படையினரிடம் பறிகொடுத்து விட்டு வெறும் கையுடன் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தனர். காங்கேசன்துறையில் நடைபெற்ற கடும் சோதனை நடவடிக்கையின் போதே மேற்படி சம்பவம் நடைபெற்றது.

(ச)

## காயங்களுடன் இளைஞர் கிணற்றிலிருந்து மீட்பு

(வடமராட்சி)

அச்சுவேலி இடைக்காடு பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து நெஞ்சிலும் தொடையிலும் காயங்களுக்கு இலக்கான நிலையில் ஒரு இளைஞர் உயிருடன் மீட்கப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த இருபது வயதான பொ. இராசா என்றழைக்கப்படுபவர் அயலவர்களால் மீட்கப்பட்டவராவார்.

இதுபற்றித் தெரியவருகையில், இனம் தெரியாத பலரால் இவ்விளைஞர் பிடிக்கப்பட்டு நெஞ்சிலும், தொடையிலும் கத்தியால் குத்தப்பட்டு கண்கள் கட்டப்பட்ட நிலையில் கிணற்றில் வீசப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இவர் பின்னர் கிணற்றிலிருந்து பலத்த குரல்கொடுத்து அலறியதையடுத்து அயலவர்களால் மீட்கப்பட்டார்.

(யோ)

## மாணவர் வளர்ச்சி ஆசிரியரிலேயே உள்ளது

## வீதிவிபத்தில் இளைஞர் காயம்

(தென்மராட்சி)

மோட்டார் சைக்கிளும், சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்து ஒன்றில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சாவகச்சேரி பெருங்குளம் சந்தியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இவ் விபத்தில் கல்வயலைச் சேர்ந்த கணவதனன் (20வயது) என்பவரே இவ்வாறு காயமடைந்தவர் ஆவார்.

காயமடைந்த இவ் இளைஞர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(86)

## கூட்டுறவுப் பரிசோதகர் வினாத்தாள்கள் வந்தன

(வடமராட்சி)

இரண்டு பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் நேற்று கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்தது. இதற்கான அனுமதி அட்டைகளும் காகிதாதிகளும் வந்தன.

நாளை மறுதினம் நடைபெறவிருக்கும் கூட்டுறவுப் பரிசோதகர் மற்றும் கிராம அலுவலர்கள் பதவி உயர்வுக்கான வினாத்தாள்களே எடுத்து வரப்பட்டன.

அடுத்த மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள மக்கள் வங்கி எழுதுவினைஞர்களுக்கான பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகளும் இவற்றுடன் வந்துள்ளன. இப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் இம்மாதம் 28ஆந் திகதி வந்து சேரும் என கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (யோ)

## சிறுதானிய உற்பத்தி

சிறிலங்கா அரசின் பொருளாதாரத்தடையை எதிர்கொள்ளும் நோக்குடன் சிறுதானிய உற்பத்தியை தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தினர் ஊக்குவித்து வருகின்றனர். தற்போது நெல் அறுவடையின்பின் நிலத்தில் உள்ள ஈரத்தைப் பயன்படுத்து சிறுதானியங்களான நிலக்கடலை, கௌபி, உழுந்து, பயறு, கம்பு போன்றன விதைக்கப்படுகின்றன.

இம் முயற்சியில் வடமராட்சிக் கோட்டத்தில் கரணவாய் மேற்கு, இமயாணன், கெருடாவில் தெற்கு கப்புது ஆகிய இடங்களில் சிறுதானிய பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் கணிசமான அளவு பரப்பில் பயிர் செய்வதற்கான ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன.

# பரியோவான் -மத்திய கல்லூரி; 90-வது மாபெரும் கிரிக்கெட் போட்டி

யாழ். மத்தியகல்லூரி - பரியோவான் கல்லூரி அணிகளுக்கிடையான 90ஆவது வருடாந்த கிரிக்கெட் போட்டி நாளையும், நாளை மறுதினமும் மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

1904-ம் ஆண்டில் 'பட்டில் ஒப் த நோர்த்' என்று அழைத்து இப்போட்டி ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை நடைபெற்ற 89 போட்டிகளில் பரியோவான் கல்லூரி 32 போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது மத்திய கல்லூரி 20 போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது. 29 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் நிலைநாட்டப்பட்ட சில சாதனைகள்;

ஃ ஒரு இனிங்சில் ஆகக்கூடிய ஓட்டங்கள் 354 ஒன்பது விக்கட் இழப்புக்கு மத்திய கல்லூரி- 1993

ஃ ஆகக்கூடிய ஓட்டங்கள் 145 சுரேஸ்குமார் பரியோவன் கல்லூரி- 1990.

ஃ ஒரு இனிங்சில் ஆகக்கூடிய விக்கட்டுகள் கைப்பற்றப்பட்டமை ஒன்பது விக்கட்டுகள்

ஈ. கி. தேவநாயகம் பரியோவன் கல்லூரி- 1940

வி. சண்முகம் மத்திய கல்லூரி- 1951

இம்முறை நடைபெறவுள்ள 90-வது கிரிக்கட் போட்டியில் மத்திய கல்லூரி அணியின் கப்டனாக மணிவதனனும் உபகப்டனாக கே. சுரேசும் அணியை வழிநடத்தவுள்ளனர்.

பரியோவான்கல்லூரி அணியின் கப்டனாக பி. சஞ்ஜீவும், உப கப்டனாக ஜி. சிறிதரனும் அணியை வழி நடத்துவர்.

அணிகளின் விபரம், மத்திய கல்லூரி:

1) மணிவதனன் (கப்டன்) சிறந்த துடுப்பாட்டக்காரர் சிறந்த பந்து வீச்சாளர்.

2) கே. சுரேஷ் (உப கப்டன்) விக்கெட் காப்பாளர்.

3) எஸ். ஆசான் - துடுப்பாட்டக்காரர்.

4) கே. பிரகாஷ் - துடுப்பாட்டக்காரர்.

5) ஆர். திலீபன் - ஓஃப் ஸ்பின்னர்.

6) எம். குமரேசன்- இடதுகை துடுப்பாட்டக்காரர்.

7) எஸ். ரவிசங்கர்- சகலதுர விளையாட்டுக்காரர் (ஓல்ரவுண்டர்)

8) பி. அமலன் - இடதுகை துடுப்பாட்டக்காரர்.

9) ரி. ராஜ்குமார் - துடுப்பாட்டக்காரர்

10) எம். குணசீலன் -இடதுகை துடுப்பாட்டக்காரர்.

11) எஸ். சண்முகலிங்கம் மத்திய தர பந்து வீச்சாளர்.

12) ரி. மோகனவேல்-இடதுகை பந்து வீச்சாளர்.

13) ஒ சிவானந்தராஜா- மேலதிகவிக்கெட்காப்பாளர்.

14) ரி. சையனொளிபவன்- மத்திய தர பந்து வீச்சாளர்.

மத்தியகல்லூரியின் பயிற்சியாளராக எஸ். டி. சிவசிமித்திரன் உள்ளார், பொறுப்பாசிரியராக ஈ.எப்.ஆர் ஜெயகுமாரனும், விளையாட்டுத்துறை மாணவர் தலைவராக வி.ரி. மனோகரனும் விளங்குவர்-

பரியோவான் கல்லூரி அணியினர் விபரம்;

1. பி. சஞ்ஜீவ் (கப்டன்) - இடதுகை துடுப்பாட்டக்காரர், இடதுகை பந்துவீச்சாளர்.

2) ஜீ. சிறிதரன் (உப கப்டன்) - முதல் பந்துவீச்சாளர்.

3) ரி. அரவிந்தன் - ஆரம்ப துடுப்பாட்டக்காரர்.

4) எஸ்- தங்கநேசன் - துடுப்பாட்டக்காரர் மத்தியவேக பந்துவீச்சாளர்.

5) வி. எஸ். நிர்மலநாதன் விக்கெட் காப்பாளர், துடுப்பாட்டக்காரர்.

6) எஸ் விமலன் - பந்துவீச்சாளர் துடுப்பாட்டக்காரர்.

7) ஜே. நிமால் ராஜேந்திரம் - இடதுகை துடுப்பாட்டக்காரர், ஓப் ஸ்பின் பந்துவீச்சாளர்.

8) பி. நமேதிரன் - ஓப் ஸ்பின் பந்துவீச்சாளர்.

9) என். எஸ். ராஜீவ் -துடுப்பாட்டக்காரர்.

10) ரி. ஜெனரிபாகன்-மேலதிக விக்கட் காப்பாளர், இடதுகை துடுப்பாட்டக்காரர்,

11) என், ரி. எஸ், விஜயானந்தன் - லெக் ஸ்பின் பந்து வீச்சாளர்,

12) ஆர். ராஜகுலசிங்கம் துடுப்பாட்டக்காரர், ஓப் ஸ்பின் பந்து வீச்சாளர்.

13) ஜி. வாகீசன்- மத்திய வேக பந்து வீச்சாளர்.

14) ரி. சத்தீஸ் - மத்திய வேக பந்து வீச்சாளர்.

15) செந்தூரன் - மத்திய பந்து வீச்சாளர்.

இவ் அணிக்கு பயிற்சியாளராக சி. சூரியகுமாரன் உள்ளார். பொறுப்பாசிரியராக கே. எஸ். முகுந்தனும், விளையாட்டுத்துறை மாணவர் தலைவராக ரி. அமலசீலனும் உள்ளனர்-

மற்றும் நடுவராக டி. ஆர். அருளமநாயகம், வ-டி. தியாகராஜா கே. அகிலன் கலந்து கொள்ளுகின்றார்கள்-

## நாளைய நிகழ்வுகள்

சங்கரத்தை பிட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நாளைக் காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும். தீர்த்தத் திருவிழா 30ஆம் திகதி புதன்கிழமையும் நடைபெறும்.

(24)

# நமதுபிள்ளைகளுக்கு முழுநாடுதேவை அதற்காகவே யுத்தம் நடத்துகிறோம்

டி, பி. விஜேதுங்கா

(கொழும்பு)

நாளை நமது பிள்ளைகளுக்கு முழுமையானதொரு நாடு தேவை என்பதற்காகவே இன்று நாம் யுத்தம் செய்கின்றோம். இதனை ஐக்கிய தேசியக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் மறந்துவிட்டன. அத்துடன் சிறிலங்காவின் ஒற்றையாட்சியைப் பேணுவதற்காக சண்

அவர் மேலும் கூறுகையில்; ஐ தே. கட்சி ஆட்சியில் இருக்கும்வரை சிறிலங்கா துண்டாடப்பட மாட்டாது என்றும், இந்தப் போரை மிகவிரைவில் ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முழுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். இந்த யுத்தத்தை பிச்சைக்காரனின்

கட்சி மட்டுமே தொடர்ந்து இலட்சியத்திலிருந்து விலகாமல் இருப்பதாகவும், இதே நிலைதொடர்ந்துபேணப்படும் என்றும், வடக்கு கிழக்கு நடவடிக்கையை மேலும் தீவிரப்படுத்தவேண்டுமானால் கட்சி பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் இது இன்று தென்

மாகாணசபை வாக்காளர் கையில்தங்கி இருப்பதாகவும் குறிப்பிட்டார். எனவே தென் மாகாண சபை மக்களின் ஐ தே. கட்சியை பலப்படுத்துவதன் மூலமே இந் நடவடிக்கைக்கு மேலும் உதவ முடியும் எனவும் தெரிவித்தார்.

# ஆசிரியரிலேயே உள்ளது

## பிரதிக்கல்விப் பணிப்பாளர்

(வடமராட்சி)

மாணவர்களின்கல்வி வளர்ச்சி ஆசிரியர் சமுதாயங்களின் கைகளில்தான் தங்கி நிற்கிறது. ஒவ்வொரு மாணவர்களும் எதிர்காலத்தில் நல்ல பிரசைகளாகவும், கல்விமான்களாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும் திகழவேண்டும்.

இவ்வாறு நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையில் கடந்த ஞாயிறு அதிபர் திரு. வ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. சிவராசா குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடும்போது இன்றைய நிகழ்வுகள் சிறப்பாக இருந்தன. மக்களின் மனதில் புது உற்சாகத்தை ஏற்படுத்தியது மாணவர்களை விட பெற்றோரின் விளையாட்டுக்கள் அம்சமாக இருந்தது. ரசிக்கக்கூடியதும் கூட.

இந்த ஆரம்ப பாடசாலை ஒரு முதன்மைப் பாடசாலையுமாகும். இங்கு கல்வி கற்கின்ற மாணவர்களின் பெற்றோர் இப்பாடசாலையின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டவர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு இந்தப்பாடசாலையின் வளர்ச்சித்தேவை பாடசாலையும் பெற்றோரின் ஒத்துழைப்பை சார்க்க வேண்டும்.

இன்றைய நிகழ்வுக்குத் தேவையானவற்றை பெற்றோர் உதவி நிற்கின்றனர். பணம் மட்டுமல்ல, தமது சேவைகளையும் தாங்களாகவே முன்வந்து உதவினர். தங்களது பிள்ளைகளின்கல்வி வளரவேண்டுமென்பதை இலக்கு வைத்து அவர்கள் இப்பாடசாலைக்கு உதவி வருகின்றனர்.

பாடசாலை வளரவேண்டுமானால் நல்ல அதிபராகவும் சுத்தமான கை உள்ளவராகவும் இருக்கவேண்டும். அதன் பேரில் தற்போதைய அதிபர் இப்பாடசாலையின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டவர். இவர் கல்வித்திணைக்களத்தின் அன்புக்கு பாத்திரமானவராக இருந்து வருகிறார். அதற்குக் காரணம் அவரது கல்விச்சேவைதான். இவர்நல்ல பெயரைப் பெற்று செயற்படுகிறார்.

ஆசிரியர்களின் செயல்கள் செயற்பாடுகள் பிள்ளைகள் மத்தியில் பதிந்துவிடும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருந்து உலகில் சிறந்தவர்களாகவும், உயர்ந்தவர்களாகவும் மாற்ற வேண்டும் பிள்ளைகளும் பெற்றோரும் ஆசிரியர்களை மதித்துவர வேண்டும்.

இன்றைய கதாநாயகன் இப்பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும்தான் எனக்கூற விரும்புகின்றேன் என்றார்.

சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கரவெட்டி பிரதேச செயலாளர் திரு. எஸ். ஸ்ரீநிவாசன் 'இளமையில்கல்' என்ற பதத்தில் உரையாற்றினார். பழைய மாணவர்கள் சார்பில் வடமராட்சி கிழக்கு கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. செல்வராசா உரையாற்றினார்.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பிரதம விருந்தினரின் துணைவியார் பரிசில்களை வழங்கினார், விளையாட்டு செயலாளர் திரு. சிவஞானம் நன்றியுரை வழங்கினார்.

(யோ)

---

லங்காவின் ஒற்றையாட்சியைப் பேணுவதற்காக சண்டையில் ஈடுபடுபவர்களை ஐ.தே.க. தான் சிறந்த முறையில் பராமரிக்கிறது. இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தென் மாகாண சபைக்கான ஐ.தே.க. வேட்பாளர்களை ஆதரித்து அம்பிலிப்பிட்டிய தொகுதியில் பெலியத்த பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

...வும் தெரிவித்தார். இந்த யுத்தத்தை பிச்சைக்காரனின் புண் போன்றது என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. இதற்கு உடனடியான நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எந்தக் காரணத்தைக் கொண்டும் நாடு பிளவுபட மாட்டாது என்றும் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையிலுள்ள 88 கட்சிகளில் தமது

# தேர்தல் வன்முறைகளில் பொ. முன்னணி ஈடுபடுகிறது

## ஐ. தே. க, புகார்

பொதுஜன ஐக்கிய முன்னணியினர் தென் மாகாண சபை தேர்தல் வன்முறையில் கிராமங்களில் ஈடுபட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் முறையிட்டுள்ளனர்.

தென்மாகாணத்தில்இமிதும பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி கிளைகள் பத்து மீது இதுவரை தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அவை முற்றாக சேதமடைந்ததாகவும், இதில் நான்கு தீவைக்கப்பட்டதாகவும் இத்தாக்குதலில் பலர் காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஓய்வூதிய வவுச்சர்கள் செயலகத்திற்குவந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

மார்ச் மாதத்திற்கான அரச, உள்ளூராட்சி, புகையிரதப்பகுதி ஏடங்களான ஓய்வூதியக் கொடுப்பனவுப் பத்திரங்கள் இந்த வாரத்திற்குள் அனுப்பி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றோடு புகையிரதப் பகுதி ஓய்வூதியங்களுக்கான காசோலைகளும் இந்த வாரத்திற்குள் அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க உபதலைவரின் உதவியுடன் மார்ச் மாதத்திற்கான அரச, உள்ளூராட்சி புகையிரதப் பகுதி ஓய்வூதியக் கொடுப்பனவுப்பத்திரங்கள் 'நரோமா' கப்பல்மூலம் யாழ். செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன எனவும், புகையிரதப் பகுதி ஓய்வூதியங்களுக்கான காசோலைகள் யாழ் அரச அதிபரின் வேண்டுகோளின் பேரில் சேகரிக்கப்பட்டு இங்கு கிடைக்கப்பெற்றன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளன

---

# விண்ணப்பிக்க கோரிக்கை

சாவகச்சேரி கல்விக்கோட்டத்தில் தமிழ்ப்பாடம் போதிப்பதற்கான முதன்மை ஆசிரியர் பதவி வெற்றிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது யாழ்ப்பாணக் கல்வி வலயம் ஒன்றில் தற்போது பணிபுரியும் தகுதியான ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை உடனடியாக அனுப்பி வைக்கும்படிகோரிக்கைவிடப்பட்டுள்ளது.

---

...பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் இது இன்று தென் ...கைக்கு மேலும் உதவ முடியும் எனவும் தெரிவித்தார்.

# பெண்களின் விடுதலைக்கு முன்னுரிமை வழங்கப்படும்

## - அருண் மாஸ்ரர்

(பருத்தித்துறை)

"தமிழீழத்தில் பெண் விடுதலைக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெண்கள் அனைவரும் ஆண்களுக்குச் சரிநிகர் சமமானவர்கள். பெண்ணினத்தின் அடக்கு முறைகளை உடைத்தெறியும் சகல போராட்டங்களிலும் தமிழீழ பெண்ணினம் முன்னணியில் திகழ்ந்து வருவது மகிழ்ச்சிக்குரியது. சங்க காலத்திலே பெண்களின் வழி காட்டலில் ஆண்கள் போரிட்டது போன்ற நிகழ்ச்சிகளை பூநகரிச் சமரிலே நாம் காணக் கூடியதாக இருந்தது. தமிழீழ பெண்ணினம் இன்று உலகத்திலேயே தலை நிமிர்ந்து உயர்ந்து நிற்பது எமது தமிழீழ தேசியத் தலைவரின்வழிகாட்டலினால்தான் என்பது உலகறிந்த உண்மையாகும்."

இவ்வாறு வடமராட்சி உழைக்கும் மகளிர் நிறுவனம் மகளிர் தினத்தை யொட்டி நடாத்திய விழாவிலே உரையாற்றிய தமிழீழ கல்விக்கழகநிர்வாகப் பொறுப்பாளர் திரு. அருண்மாஸ்ரர் குறிப்பிட்டார். பருத்தித்துறை கலாமண்டபத்தில் யாழ். தெற்கு கல்விப்பணிப்பாளர் செல்வி திலகவதிபெரியதம்பிதலைமையிலே நடந்த இவ்விழாவிலே சுவாமி சித்ரூபானந்தா அருளுரை வழங்கினார். இளைப்பாறிய உப அதிபர் செல்வி கீதா வேலுப்பிள்ளை ஆற்றிவரும் சமய, சமூக, கல்வி அபிவிருத்திப் பணிகளைப் பாராட்டி கல்விப்பணிப்பாளர் செல்வி பெரியதம்பி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அருண் மாஸ்ரர் குறிப்பிட்டதாவது:

இன்றைய தமிழீழ பெண்கள் அடக்குமுறைகளை உடைத்தெறியும் சகல நீதியான போராட்டங்களிலும் முன்னின்று பங்கெடுத்து வருவது தமிழீழத்தின்எதிர்காலத்திற்கு மிக இன்றியமையாததாகும். பெண்ணினத்தின் விடுதலைக்காகவும், உயர்ச்சிக்காகவும் மேற்கொள்ளப்படும் சகல திட்டங்களையும் தமிழீழ தேசியத் தலைவர் முன்னெடுத்து வருகிறார். இச்சந்தர்ப்பத்தை பெண்ணினம் முழுமையாகப் பயன்படுத்தி உயர்வடைய வேண்டும். பெண்ணினம் மதிக்கப்படும் போதுதான் எதிர்காலம் சுபீட்சம் பொருந்திய ஒளி வீசும் காலமாக அமையும்.

இவ்விழாவை வடமராட்சி மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி யாழரசி தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி ஆரம்பித்துவைத்தார். பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர்திரு. க. கமலேசுவரம் வடமராட்சி உழைக்கும் மகளிர் நிறுவன இணைப்பாளர் திரு. வி. ஜி. தங்கவேல், இளைப்பாறிய உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. பொன். மாணிக்கவாசகர், செல்வி சித்திரா, அருள்நந்தி ஆசிரியை செல்வி அ. கனகரத்தினம் உட்பட இன்னும் பலர் "மகளிர் மேன்மை" பற்றி உரையாற்றினர். விவாத அரங்கு, கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. நிறுவனச் செயலாளர் செல்வி இரத்தினசோதி சிதம்பரப்பிள்ளை நன்றியுரை வழங்கினார். (25)

---

30ஆம் திகதி புதன்கிழமையும் நடைபெறும். (24)

ஃ ஃ

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலய மாணவிகள் வழங்கும் "வீரத்துறவி" சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கைக் காவியம் வில்லிசை நிகழ்ச்சி நாளை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அதிபர் திருமதி எஸ். ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இராமகிருஷ்ணாலய இயக்குநர் திரு. இ. ராஜமகேந்திரசிங்கம் அவர்களும் உரையாற்றுவார்.

ஃ ஃ

சுழிபுரம் பறாளாய் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணியர் சுவாமி கோயில் இலட்சார்ச்சனை விஞ்ஞாபனப் பூர்த்தியும், சுழிபுரம் பறாளாய் தொண்டர் சபையினரால் நடாத்தப்பட்ட பஞ்சபுராண மனனப் போட்டிப் பரிசளிப்பு விழாவும் ஆலய மண்டபத்தில் நாளை இரவு 7-00 மணியளவில் தொண்டர் சபைத் தலைவர் திரு. இ. வரதராசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தில் யாழ். நல்லூர் பிரதேச நிலையத்தில் தையல் கண்காட்சியும், விற்பனையும் நடைபெறவுள்ளது நாளை காலை 10-00 மணியளவில் நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள சர்வோதய பிரதேச நிலைய மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ள மேற்படி கண்காட்சியில் தையல், கேக் ஐசிங், பூவேலை ஆகியன மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு மாலை 5-00 மணியளவில் விற்பனையும் இடம்பெறவுள்ளதென பிரதேச இணைப்பாளர் திருமதி சோமதி ரவிதாஸ் அவர்கள் தெரிவித்துள்ளார். (41.

# பதவியில் ஒட்டியிருக்க அரசு தீவிரமுயற்சி செய்கிறது

### வாசுதேவ நாணயக்கார உரை

(கொழும்பு)

எவ்வாறாயினும் பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பதற்கே அரசு தீவிர முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. வடக்கிலோ தெற்கிலோ பல்லாயிரக்கணக்கானோர் அநியாயமாக செத்து மடிந்தால் என்ன, வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாக கோடிக் கணக்கில் பணம் கொட்டிச் சிந்தப்பட்டால் என்ன, அரசுக்கு ஒரு விதமான மனக் கிலேசமும் கிடையாது என தென்மாகாணசபை தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய வாசுதேவநாணயக்கார தெரிவித்தார்.

நான் யுத்தப் பிரகடனம் செய்யவில்லை எனவே யுத்தமென்று ஒன்றில்லையென்று ஜனாதிபதி அண்மையில் கூறியுள்ளார். உயர் பொறுப்பில் உள்ளவர்கள் யதார்த்தநிலைகளை எவ்வாறு மறைத்து விடப்பார்க்கின்றனர் என்பதையே இது காட்டுகின்றது. இன்று யுத்தம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதுதான் உண்மை. யுத்தத்திற்கான அடிப்படைப் பிரச்சினையைத் தீர்த்து யுத்தத்தை காலம் தாழ்த்தாமல் எப்படி முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதே இங்கேயுள்ள முக்கிய விடயமாகும்.

யுத்தத்திற்கு இன்றுவரை சுமார் 250,000 கோடி ரூபா விரயமாகியுள்ளது. இது கங்காவலித்திட்டம்போன்ற நான்கு திட்டங்களுக்கு போதுமானதாகும். தமிழ் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஓர் உருப்படியான விவேகமான அணுகு முறை கையாளப்பட்டிருந்தால் யுத்தத்திற்குச் செலவாகும் பெருமளவு பணம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த பயன்படுத்தியிருக்கலாம் எனவும் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

## மட்டு. அரசாங்க அதிபருக்கு அநாமதேய மிரட்டல்கள்

(கொழும்பு)

கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலில் நடைபெற்றமுறைகேடுகளை விசாரணை செய்யும் குழுவில் இடம்பெற்றுள்ள மட்டக்களப்பு அரச அதிபர் ஆர். மோனகுருசாமிக்குத் தொலைபேசி மூலம் அநாமதேய மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நான் பலமுறை இவ்வாறு தொலைபேசி மூலம் மிரட்டப்பட்டுள்ளேன் என மட்டக்களப்பு அரச அதிபர் குறிப்பிட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏறாவூர், காத்தான்குடிப் பகுதிகளில் இடம்பெற்ற தேர்தல் மோசடிகள் குறித்த விசாரணையைக் கைவிடுமாறு தம்மை இந்த அநாமதேய மிரட்டல்காரர்கள் எச்சரிப்பதாகவும் அவர் கூறினார்.

## பஸ்ஸில் பயணம் செய்து பிரதமர் ரணில் பிரசாரம்

(கொழும்பு)

தென்மாகாண சபையின் தேர்தல் பிரசாரத்திற்காக தனியார் பஸ் வண்டியில் நடமாடும் பிரசார நடவடிக்கையை சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேற்கொண்டு வருகின்றார்.

காலியில் இருந்து மாத்தறை வரை செல்லும் இத் தனியார் பஸ் வண்டியில் அவர் அமர்ந்தபடி முக்கிய இடங்களில் வண்டியை நிறுத்திவிட்டு திடீர் திடீர் என ஒலிபெருக்கி மூலம் பேச்சு நிகழ்த்தி இதில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாலியல் நடத்தையில் ஈடுபட மாணவர்மீது நிர்ப்பந்தம்

### பாடசாலை அதிபர் கைது

(கொழும்பு)

பாடசாலை மாணவன் ஒருவரை பாலியல் நடத்தைக்கு பயன்படுத்த முனைந்த பாடசாலை அதிபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். ஹோமகம பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின் 52 வயதான இவ் அதிபர், பதினாறு வயதுடைய தமது மகனை பாலியல் நடத்தைக்கு இணங்குமாறு வற்புறுத்தியதாகவும், அவர் மாணவர் தலைவர் பதவியை பெற உதவுவதாக கூறியதாகவும் சம்பந்தப்பட்ட மாணவனின் தந்தை பொலிஸில் புகார் செய்துள்ளார்.

பாடசாலை மூடிய பின்பு சம்பந்தப்பட்ட மாணவனை பலாத்காரமாக நிறுத்தி பாலியல் நடத்தையில் ஈடுபட முயற்சித்தார் என்று ஹோமகம பகுதி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் கடந்த சில வருடங்களாக தமது மனைவியை பிரிந்திருப்பவர் என்றும் கூறப்படுகிறது.

## திட்டம் கைவிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

மட்டக்களப்பிற்கும் பொத்துவிலுக்கும் இடையிலான ரயில்பாதை அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்திட்டத்திற்கு நிதிஉதவி அளிக்க முன்னதாக முன்வந்த ஈரான் அரசு தற்போது இது குறித்து பரிசீலிக்க வேண்டியிருப்பதாக கூறியுள்ளதால் இத்திட்டம் கைவிடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சை

(கொழும்பு)

மக்கள் வங்கிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 2ஆம், 3ஆம் திகதிகளில் நடைபெற இருக்கின்றது. இதற்கான அனுமதி அட்டைகள் கொழும்பில் இருந்து

## வடபகுதியைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் தயார்

### அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ

வடக்கில் அரசின் கட்டுப்பாட்டில் இல்லாதபகுதிகளை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுகிறது வடக்கு கிழக்கு இணைப்பில் மணலாறு பிரதேசம் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தேற்றறைய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். சமீப நாட்களில் புலிகள் நடவடிக்கையின் முக்கிய இலக்காக மணலாறே இருந்து வருகின்றது எனவும் குறிப்பிட்டார். இவ்வாண்டின் முதல் மூன்று மாதகாலத்தில் 37 படையினர் யுத்தத்தில் பலியானதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையில் இனப்பிரச்சினை கிடையாது எனும் சிறிலங்கா அரசின் நிலைப்பாட்டை அமைச்சர் மீண்டும் வலியுறுத்தினார். தமிழ் மக்களின் பெரும்பாலான பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட்டுள்ளன. வடக்கு கிழக்கு நெருக்கடி உள்நாட்டுப் பிரச்சினை. எனவே வெளியார் தலையீட்டிற்கு அவசியமில்லை எனவும் அமைச்சர் பெர்னாண்டோ மேலும்தெரிவித்தார்.

## பொதுமக்கள் ஐ. முவின் 5காரியாலயங்கள் அழிப்பு

தென்மாகாணத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஐந்து கிளைக் காரியாலயங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக் குண்டர்களினால் முழுமையாகச் சேதமாக்கப்பட்டுள்ளதாக 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அக்குரஸ்ஸ கொட, கராகொட, மிரிஸ்வத்த, உயன்கொட, கத்துவ பகுதிக் காரியாலயங்களே இவ்வாறு சேதமாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்க்கட்சி முக்கியஸ்தர் வாகனம் மோதி மரணம்

(கொழும்பு)

தென் மாகாணசபை தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் முக்கிய பங்கேற்ற ஒருவர் வாகனமொன்றினால் அடித்துக்கொல்லப்பட்டுள்ளார்.

எம்.எல். பிரேமசந்திர என்ற இவர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகியவர் எனவும், இவரது வாகனத்தை நோக்கி முன்பொருதடவை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட போது வாகனம் சேதத்துக்குள்ளாகியது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தனது பிள்ளைகளை பாடசாலையில் சேர்த்துவிட்டு தனது வாகனமருகே நின்றபோது வேகமாகவந்த வாகனமொன்று இவரை மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

## தனியார்நிதி நிறுவனத்தின் இயக்குநர் தப்பி ஓட்டம்

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய தனியார் நிதி நிறுவனம் ஒன்றின் இயக்குநர்கள் நாட்டைவிட்டு தப்பிச் சென்றுவிட்டதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இதனால் வாடிக்கையாளர் பலர் தமது சேமிப்பைஇழந்துவிடுவோமோ என்ற பீதியில் உள்ளதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

ஆர்.ஏ.டி. மெல்மாவத்தையில் உள்ள இந் நிறுவனத்தின் கட்டடம் சுமார் 55 மில்லி

பான மேற்பார்வைக்கு பொறுப்பான மத்திய வங்கி இயக்குநர் டாக்டர் என்.எல். சிறிசேனா தெரிவித்தார். இந்நிறுவனத்தின் அனுமதிப்பத்திரம் மூன்று மாதங்களுக்கு முன்பாகவே ரத்துச்செய்யப்பட்டுவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிறுவனத்தின் சொத்துகள் யாழ்ப்பாணம் வவுனியா ஆகிய பகுதிகளிலும் உள்ளதாகவும் இந்நிதி நிறுவனத்திற்கு புதிய இயக்குநர் சபை


## வெற்றுப்போத்தல்கள் தேவை

பின்வரும் வெற்றுப் போத்தல்கள் எமது நிறுவனத்தின் பாவனைக்காகக் கொள்வனவு செய்யப்படும்.

1) 300 மி லீ போத்தல்கள், வெற்றுப்பெட்டி
2) 750 மி. லீ. போத்தல்கள்
3) 625 மி. லீ. போத்தல்கள்
4) ஜாம் போத்தல்கள்
5) சம்போ பிளாஸ்ரிக் போத்தல்கள்

இவற்றை விற்பனை செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

பொதுமுகாமையாளர்,
யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
இல. 75/1, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
ஃ (விலை நேரில் பேசித் தீர்க்கப்படும்.)

(சி-8850)


''விண்தவழ்ந்த சூரியனும் விழுந்து போச்சே!''

திரு. இளையதம்பி செல்வராஜா

அவர்களின்

## 31-ம் நாள் நினைவு அஞ்சலிகள்



மலர்வு
19.01.1943

உதிர்வு
15.2.1994

பெரும் குடும்ப பாரமெல்லாம் நீ சுமந்து
பிள்ளைகள் நாம் கவலையின்றி வாழவைத்தாய்
அருந்தவனே! எம்மைப் பெற்ற ஐபாவுன்னை
ஆசைதீர எப்பிறவி தன்னில் காண்போம்?
மருந்தனுமானந் தேடி யணைத்துத் தூக்கி
மாதாவும் நாங்களுமுன் கைதூக்க வெண்ண
பருந்துபோல் பறந்து வந்து றாஞ்சிக் கொண்டு
படுபாவி யந்தகனுஞ் சென்றானையோ!

இன்று (17-03-1994) எங்கள் வீட்டில் நடக்கவுள்ள நிகழ்வுகளில் கலந்து எங்களன்புத் தெய்வத்தை நினைவு கூரும் வண்ணம் உறவினர்கள் அன்பர்களை வேண்டுகின்றோம்.

திருமதி செ. சிவபாக்கியம்

# வெளியிலிருந்து வருவோர் விசேட சலுகை பெறார்

(கொழும்பு)

மேற்கு நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்படவுள்ள இலங்கை அகதிகள் ஏற்கனவே உள்நாட்டில் உள்ள அகதிகள் போலவே பராமரிக்கப்படுவர். அவர்களுக்கு மேலதிக வசதிகளோ சலுகைகளோ வழங்கப்படமாட்டாது என புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலர் திரிவிரி சில்வா தெரிவித்துள்ளார்.

வடக்கிழக்கில் வாழும் அகதிகளுக்கு நிவாரணம் வழங்கப்படுவதைப் போலவே வெளிநாடுகளில் இருந்து திரும்பும் அகதிகளுக்கு நிவாரணம் வழங்கப்படும் மேற்கு நாடுகளில் இருந்து வருகின்றனர் என்பதற்காக நவீன வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்பதற்கில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஈழத்தின் எல்லை விரைவில் மதவாச்சி வரை வரும்

– சந்திரிகா

(கொழும்பு)

வடக்கில் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஈழ அரசாங்கத்தைப் பெற்று விட்டார். தற்போது அதன் எல்லைகள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன என தென்மாகாண சபைக்கான தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்; நாம் இன்று வவுனியாவுக்கு வடக்கே செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நாளை இது மதவாச்சிக்கு வடக்கே என்ற நிலையை உருவாக்கும். இதற்குக் காரணம் இந்த அரசாங்கம் தான். தொடர்ந்து இந்த அரசாங்கம் நீடிக்குமானால் இந்த எல்லை மேலும் விரிவடையும் இதனை மாற்றியமைக்க தென்மாகாண மக்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

# கிழக்கு தேர்தல் முறைகேடு விசாரிக்க உயர் குழு

(கொழும்பு)

கிழக்கில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல்களில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து விசாரிக்க உயர்மட்டக் குழு ஒன்று மட்டக்களப்பிற்குச் சென்றுள்ளது. ஏறாவூர், காத்தான்குடி ஆகிய இடங்களில் வாக்குச்சாவடிகளில் ஆயுத பாணிகளால் நடத்தப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக இக்குழு விசாரணை நடத்தும்.

முறைகேடுகள் நடைபெற்ற வாக்குச் சாவடிகளில் தேர்தல் கடமையில் ஈடுபட்ட அரச ஊழியர்களையும் பொலிஸாரையும் அழைத்து அவர்களின் சாட்சியங்களை குழுவினர் பதிவு செய்தனர்.

...கள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளது. இவ் அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும் என்று கூறப்படுகிறது (க)

# நரோமாவில் யாழ். வருவர்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இருந்து திரும்பும் அகதிகளை ஏற்றிக்கொண்டு வரும் 23ஆம் 25ஆம் திகதிகளில் நரோமா கப்பல் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேரும் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் யாழ். அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்.

கப்பல் மூலம் இந்தியாவில் இருந்து திருகோணமலை துறைமுகத்திற்கு திரும்பும் அகதிகளை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரும் இக்கப்பலுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பாதுகாப்பு வழங்குவதாகவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து திரும்பும் அகதிகள் யாழ் குடாநாட்டிற்கு வருவது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (வி, ச)

# கொழும்பில் பாதுகாப்பு தீவிரம்

(கொழும்பு)

கொழும்பில் மீண்டும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் படையினரின் சோதனை நிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந் நடவடிக்கைக்குப் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் பணியகம் கோரிக்கை விடுத்துள்ளது.

...யில் உள்ள இந் நிறுவனத்தின் கட்டடம் சுமார் 55 மில்லியன் ரூபாவுக்கு விற்கப்பட்டு அப்பணம் வைப்பிலிட்டவர்களுக்கு மீள வழங்கப்படும் என நிதி நிறுவனங்கள் தொடர்...

...றகு புதிய இயக்குநர் சபை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். எனினும் அவர்களது பெயர் விபரங்களை அவர் வெளியிடவில்லை.

# வசமாக மாட்டிய திருடன் பயணிகளை தாக்கினான்

(கொழும்பு)

பயணிகளிடம் வகையாக மாட்டிக் கொண்ட திருட்டு நபர் ஒருவர் தப்பிக்க முடியாத நிலையில் தன்னிடமிருந்த கத்தியை எடுத்து பஸ்ஸில் இருந்தோரை குத்திக் காயப்படுத்திய சம்பவம் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கு அருகில் இடம் பெற்றது.

எனினும் பயணிகள் துணிச்சலுடன் போராடி திருடனை பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்- இரவு 9-30 மணியளவில் புறக்கோட்டையில் இருந்து மகர நோக்கி சென்ற பஸ் சுகததாஸ விளையாட்டரங்கை அண்மித்த வேளை இத் திருட்டுநபர் பஸ்ஸில்நின்றிருந்த ஒருவரின் பணப்பையை உருவியுள்ளார். பணத்தை பறிகொடுத்தவர் திடீரென உஷாரடைந்து பஸ்ஸின் கதவை மூடுமாறு குரல் எழுப்பியுள்ளார். தப்பியோட வழியில்லாத நிலையில் அத்திருடன் தன்னிடமிருந்த கத்தியை வெளியே எடுத்து சூழ நின்றோரை வெட்டிக்காயப்படுத்தி ஓட முயன்றார். பயணிகள் பலர் வெட்டுக்காயத்திற்கு இலக்கான போதும் திருடனை மடக்கி பிடித்தனர்-

பஸ் எங்கும் இரத்தம் சிந்தியிருந்தது. கடுமையான காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

# உள்ளூராட்சி உறுப்பினர்கள் எம். பிகள் என்ற கற்பனை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தலில் தெரிவான சில உறுப்பினர்கள் தாம் பாராளுமன்றம் சென்று மக்கள் பிரச்சினையை தீர்த்து வைப்பதாக கூறிவருகின்றனராம்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தேர்தல் என்றால் என்ன; உள்ளூராட்சி மன்றம் என்றால் என்ன என்பது பற்றி தெரியாத பலர் போட்டிக்கு நிறுத்தப்பட்டதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இத்தேர்தலில் தெரிவான சிலர் தாம் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்றும் நாம் அங்கு மக்கள் குறைகளை எடுத்துக் கூறப்போவதாகவும் கூறிவருகின்றனர்.

திருமதி செ. சிவபாக்கியம்
(சங்கீத ஆசிரியை, பளை மகாவித்தியாலயம்)
பிள்ளைகள்: தேவகி, அகிலன்,
அனுஷா, அகல்யா.

தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (7766)

# 3-ம் ஆண்டு நினைவு நாள்



பிறப்பு
5.03.1971

வீரச்சாவு
19.03.1991

## 2-ம் லெப். அம்பி
(நாகலிங்கம் கனகரஞ்சன்)
திதி: 17.03.1994

விதையாகி விட்ட வீரவேங்கை
விடியலைத் தேடிய உன் வீரச்சாவு
கதையாகி கற்பனையாகி விடவில்லை
சரித்திரமாகி என்றும் சாட்சி பகரும்

இந்நாளில் எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

19.03.1991 அன்று சிலாவத்துறை இராணுவ முகாம் தகர்ப்பின்போது இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 82 வேங்கைகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர். - குடும்பத்தினர்.
(7759)

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

உண்மையை நிலைநாட்டும் சான்றினைப் பெறுவதில் தான் அறிவு அடங்கியுள்ளது, உண்மை என்ற நம்பிக்கை கொள்வதில் மட்டுமல்ல.

— சார்லஸ் ஸ்பாலிறங்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## டிக்சிற்றின் ஒப்புதல்

அரசியல்வாதிகள், இராணுவ அதிகாரிகள், அரச உயர் அதிகாரிகள் பலர் அதிகாரத்தில் இருக்கும் வரை அன்றைய அரசியல் யதார்த்த நிலையைச் சரியாகக் கணிப்பிடுவதில்லை. சிலவேளை கணிப்பிட்டிருப்பினும் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. பதவிகளைத் துறந்த பின்பும், அதிகாரங்களை இழந்த பின்புமே தமது கடந்தகால தவறுகள் பற்றி ஒப்புக்கொள்கின்றனர்.

அந்த வரிசையில், முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்சிற்றும் தற்போது சேர்ந்து கொண்டுள்ளார். ஜே. என். டிக்சிற் இலங்கை விடயம் தொடர்பாக, 'இந்து' பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரை பலருக்கு அதிர்ச்சியாக இருக்கலாம், சிலபேருக்கு ஆத்திரமாகக் கூட இருக்கலாம். இதேவேளை இதனை பலர் டிக்சிற்றின் 'சுடலை' ஞானம் எனவும் வர்ணிக்கலாம். வேறொரு பகுதியினர் 'பாவமன்னிப்பு' என்று கூடக் கூறலாம்.

ஆனால், இதில் எதுவாக இருப்பினும், டிக்சிற் இனப்பிரச்சினையின் தார்ப்பரியம் பற்றியும், விடுதலைப் புலிகளின் குறிப்பாக தலைவர் பிரபாகரன் பற்றியும் சரியான கணிப்பீட்டை தற்பொழுது வெளியிட்டுள்ளார். அதாவது இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக டிக்சிற் யதார்த்த நிலையை சரியாக வெளிப்படுத்தியுள்ளதோடு, இந்தியாவின் எதிர்கால அரசியல் நிலைப்பாடு எவ்வாறு இருக்க வேண்டும் எனவும் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளார்.

இனப்பிரச்சினையின் தீர்வில் விடுதலைப் புலிகள் இயக்கம்தான் மையசக்தியாக இருக்கும் என்பதும் ஈ. பி. ஆர். எல். எப். அமைப்பும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் பொருத்தப்பாடு அற்றவர்கள் என்பதும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தன்னையொரு தனியரசிக்கான கெரில்லாப் படையின் தலைவர் என்ற நிலையில் இருந்து ஓரின மக்களின் விரத்

# தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்

1990 யூன் மாதம் தொடங்கிய போரின் பின்விளைவாக எழுந்த சூழ்நிலைகளிலே தமிழீழத்தின் பெரும்பாலான தொழில் முயற்சிகள் முடங்கிச் செயலற்றுப் போயின இப்படியாக முடங்கிப் போய் விட்ட தொழிற்றுறைகளுக்குப் புத்துயிரூட்டி, தமிழீழத்தின் கைத்தொழில் மேம்பாட்டுக்குத்தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காகத் தமிழீழ தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. செயற்படச் செய்யக் கூடிய அதிகபட்ச எண்ணிக்கையிலான நிறுவனங்களை மீள இயங்கச் செய்வதன் மூலம் எம் நாட்டின் உற்பத்திகளைப் பெருக்கி அதிக மனித வளப் பயன்பாட்டை ஏற்படுத்தியும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக இந்நிறுவனம் உழைத்து வருகிறது.

மக்களின் நுகர்வுக்கென உயர் தரத்தில் பொருள்களை இந்த மண்ணிலே உற்பத்தி செய்வதனை உறுதிப்படுத்துவதன் மூலம் உயர்தரம் கொண்ட உற்பத்திப் பொருட்களை மக்கள் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை உருவாக்குவதும் இந்நிறுவனத்தின் இன்னொரு முக்கிய பணியாக இருக்கப் போகிறது.

இங்கு ஏற்கனவே உள்ளூர் பொருள்கள் என்றால் தரமற்றவை என்ற கருத்து நிலவி வந்தது. இந்தக் கருத்தைத் தற்போது விற்பனைக்கு வரும் உற்பத்திகள் சிறிது சிறிதாக மாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையில் சிங்களப் பேரினவாத அரசு நடைமுறைப்படுத்தும் பொருளாதாரத் தடைகளின் பின்னணியில் தோன்றியுள்ள நெருக்கடி நிலையில் எமது உற்பத்திகளின் எட்டக்கூடியதாக உள்ள தரம் கீழே சரிந்தால் விடிவில் நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் நம்பிக்கை சிதறுண்டு போகும். எமது எதிர்கால சந்ததியினருக்காக நாம் இந்நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்திருப்பதும் பொருளில்லாமல் போய் விடும்.

இவ்வகை வீழ்ச்சியில் இருந்து எமது மண்ணின் உற்பத்திகளைப் பாதுகாக்கவும், அதன் மூலம் எமது சந்ததியினரைப் பாதுகாக்கவும் எமது உற்பத்திகளின் தனித்துவத்தைப் பேணவும் ''தர நிர்ணயம்'' என்பது ஒரு தவிர்க்க முடியாத விடயம் என்பதை எவரும் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.

முழு தமிழீழம் தழுவிய கைத்தொழில் கொள்கையை நடைமுறைப்படுத்துதல், உற்பத்தியாளர்களின் உற்பத்திகளின் தனித்துவத்தைப் பேணிப் பாதுகாக்க வர்த்தகக் குறிகளைப் பதிவு செய்தல் (Registration of Trade Marks) புதியகண்டுபிடிப்புக்களுக்கான உரிமங்களைப் பதிவு செய்தல் (Registration of Patent Rights) கைத்தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்தல் போன்ற நடவடிக்கைகளையும் இந்நிறுவனம் மேற்கொள்கிறது.

புகழ்பெற்ற 2-ம் ஈழப்போரின் ஆரம்பத்துக்குப் பின்பு உருவாகிய நெருக்கடிகளின் காரணமாக முற்றுமுழுதாக செயலற்றுப் போன நிறுவனங்களை விட சில நிறுவனங்கள் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இயங்கிக் கொண்டு தான் இருக்கின்றன. இவற்றையும் தற்போது ஆரம்பிக்கப்படும் தொழில் முயற்சிகளையும் பதிவு செய்வதன் மூலம் அடையாளம் காண்பதற்கும் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முற்றுமுழுதாக இயங்காமலிருக்கும் கைத்தொழில் முயற்சியாளர் உற்பத்தியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தடையாக உள்ள காரணிகளையும் ஓரளவேனும் செயற்படும் நிறுவனங்கள் தங்கள் உச்சமட்ட உற்பத்தியை எட்டுவதற்கு தடையாக உள்ள காரணிகளையும் இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதும் தமிழீழ தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தின் நோக்கமாகும்.

மனித பாவனைக்கு ஒவ்வாத பொருட்களை உற்பத்தியின் போது உள்ளீடுகளாகப் பாவிப்பதனால் ஏற்படும் பாதிப்புகளை நிறுவனம் கவனத்திற் கொண்டது. உதாரணமாக சக்கரின் என்னும் செயற்கை இனிப்பூட்டி உணவுப் பதார்த்தங்களில் சேர்க்கப்பட்டதன் பலனாக பெரும் தீங்குகள்தபல ஏற்பட்டன. இதைத் தொடர்ந்து சக்கரின் பாவனை தொடர்பான ஆய்வுகளில் நிறுவனம் ஈடுபட்டது.

இந்த சக்கரின் பொதுவாக மென்பானங்கள், பழரசங்கள் போன்றவற்றின் உற்பத்தியிலேயே பயன்படுத்தப்படுவதுண்டு. இந்தப்பழக்கத்தின் காரணமாக நீரிழிவு நோயாளர் தவிர்ந்த ஏனைய மக்கள் பலவகை நோய்களினால் பாதிக்கப்பட்டிருப்பதனை சர்வதேச மட்டத்திலான ஆய்வுகள் தெளிவாக வெளிக்காட்டியிருக்கின்றன.

இத்தாக்கங்கள் குறித்த உண்மைகள் உணவுப் பதார்த்த உற்பத்தியாளருக்கு விரிவாக விளக்கப்பட்டன. சக்கரின் பாவனையை நிறுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன- இவற்றை எந்த அளவுக்கு உற்பத்தியாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்- எவ்வாறு கடைப்பிடிக்கின்றனர் என்பதை அறியும் முகமாகத் திடீர்ப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன- இதன் மூலமும் உற்பத்திகளை ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்குட்படுத்துவதன் மூலமும் சக்கரின் பாவனையைத் தடை செய்ய நிறுவனம் முயன்றுவருகிறது.

சக்கரின் பாவனைமுற்றாக நீக்கப்பட்டிருப்பது நிறுவனத்தின் செயற்பாட்டுக்கும் எம்மக்களுக்கும் கிடைத்த வெற்றி என்றே கூறலாம்- மென்பானம், பழரசம் போன்றவை நிரப்பப்படும் போத்தல்களின் விபரத்துண்டுகளில் (Label) அவை தயாரிக்கப்பட்ட திகதி காலாவதியாகும் திகதி என்பன குறிக்கப்படுவதற்கு நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டது. இதனால் பாவனைக்கு ஏற்ற பொருட்களை தாமே பார்த்து அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு பாவனையாளருக்கு உருவாக்கப்பட்டது.

நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களுக்கென பிரத்தியேகமான வர்த்தகக் குறிகளை பதிவு செய்தல் என்பது ஒவ்வொரு உற்பத்தியாளரினதும் தனித்துவத்தைப் பேணுவதற்கு சர்வதேச ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு விடயமாகும் ஒரு உற்பத்தியாளர் குறிப்பிட்ட ஒரு வர்த்தகக் குறியின் கீழ் ஒரு உற்பத்தியை சந்தைப்படுத்துகிறார் என்றால் அதே பொருளை உற்பத்தி செய்யும் இன்னொரு உற்பத்தியாளர் முன் குறிப்பிடப்பட்ட அதே வர்த்தகக் குறியின் கீழ் தனது உற்பத்தியைச் சந்தைப்படுத்த முடியாது.

அன்மையில் நடந்த ஒரு சம்பவத்தை வைத்து இதனை விளக்கலாம். எமது பிரதேசத்தில் ரொபிகள் தயாரிக்கும் பல உற்பத்தியாளர்கள் இருக்கிறார்கள். இவ்வுற்பத்தியாளர்களில் ஒருவர் ஏற்கனவே பிரபல்யமடைந்து விட்ட ரொபி வகை ஒன்றின் சுற்றுறையில் தனது உற்பத்தியை சுற்றி சந்தைப்படுத்தியிருக்கிறார் இது தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது- எமதுநிறுவனம் குறித்த உற்பத்தியாளருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு சர்ச்சைக்கு ரொபியை சந்தையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

ஒருவர் தனது சொந்த முயற்சியினால் புதிய கண்டுபிடிப்பு அல்லது தொழில்நுட்பம் ஒன்றைக் கண்டுபிடித்தால் அக்கண்டுபிடிப்பின் பொருளாதார ரீதியான உரிமைகள் கண்டுபிடித்தவருக்கு மட்டும் குறிப்பிட்ட கால எல்லை வரை உரித்துடையனவாகும். அக் குறிப்பிட்ட கால எல்லை வரை இன்னொருவர் அக்கண்டுபிடிப்பினால் கிடைக்கக் கூடிய பொருளாதார ரீதியான பயன்களைப் பெற முடியாது,

இவை மென்பானங்கள், இனிப்பு வகைகள், அப்பளம், (ஐஸ்கிறீம்) குளிர்களி போன்ற உணவு வகைகளின் உற்பத்தியாளர்களுக்குக் கலந்துரையாடல்கள் மூலம் போதியளவு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. இக் கலந்துரையாடல்களிலே சுகாதார வைத்திய அதிகாரிகள்உணவு, மருத்துவப் பரிசோதகர்கள் முதலியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை வழங்கினார்கள். இந்தக் கலந்துரையாடல்களிலே உற்பத்தியாளர்களுக்கு தர நிர்ணயத்தின் முக்கியத்துவம் உணவுப் பொருள்களின் உற்பத்தியின் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் உணவுப் பதார்த்தங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன இத்துடன் உணவுத் தயாரிப்பு நிலையங்களில் தயாரிப்பிலீடுபடுவோர் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நிலை பற்றியும் வலியுறுத்தப்பட்டது.

கைத்தொழில் முயற்சியாளர்கள் தங்கள் உற்பத்தி முயற்சிகளுக்குத் தேவையான மூலப் பொருள்களைப் பெறுவதில் உள்ள இடையூறுகளை தீர்க்கவும் நிறுவனம் முயல்கிறது. குறிப்பாக குடாநாட்டின் நெசவுத் தொழிலாளருக்கு நூல் கொள்வனவில் இருந்த சிக்கலைத் தீர்ப்பதில் நிறுவனம் உதவி வருகிறது.

மலரப் போகும் தமிழீழம் ஒரு வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடாகத் திகழும்படி செய்யும் முயற்சியில் இந் நிறுவனம் இம் மண்ணிலுள்ள கைத்தொழில் நிறுவனங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கும். முதலீட்டாளருக்கு உத்தரவாதம் வழங்கி வரிச் சலுகையளித்து கைத்தொழில் முயற்சியாளருக்கு ஊக்குவிப்பை வழங்கவும் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

## பேச்சுவார்த்தை தொடங்குவதற்காக பாதுகாப்பை இழக்க முடியாது

## இந். இராணுவ சூட்டில் ஒன்பது சோமாலியர் பலி

யொரு தனியரசிக்கான கெரில்லாப் படையின் தலைவர் என்ற நிலையில் இருந்து ஓரின மக்களின் வீரத் தலைவர் என்ற நிலைக்கு மாற்றிக் கொண்டுள்ளார் என்பதும், அதாவது தலைவர் பிரபாகரன் தமிழ் இனத்தின் தலைவர் என்ற நிலைக்கு உயர்ந்துள்ளார் என்பதும், திரு. டிக்சிற் வெளிப்படுத்தும் யதார்த்த நிலையைப் பிரதி பலிக்கும் அம்சங்களாகும்.

திரு டிக்சிற்றுக்கு இது 1986இல் சிறிலங்காவிற்கான தூதுவராக அவர் நியமிக்கப்பட்டபோதும், 1987 இல் இந்தியா - சிறிலங்கா சமாதான உடன்பாடு ஏற்பட்ட போதும், விளங்காமல் இருந்திருக்கலாம். ஏனெனில் அவருக்கு களத்தில் இருந்து வழங்கப்பட்ட தகவல்கள் தவறாக இருந்திருக்கக் கூடும். ஆனால் சமாதான உடன்பாடு கையொப்பம் ஆகிய ஓரிரு மாதங்களிலேயே அவருக்கு இது விளங்கத் தொடங்கியிருக்க வேண்டும்.

ஆனால், அவர் அதை அன்று ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. உலகின் நான்காவது பெரிய இராணுவத்தைக் கொண்டதும், பிராந்திய வல்லரசுமான இந்தியா சில நூற்றுக்கணக்கான ஆயுதபாணிகளையுடைய 'சாரம் கட்டிய பையன்களுக்கு' எவ்வாறு பணிந்து போக முடியும் என்பதே அவரது நிலைப்பாடாக இருந்தது. இந்தியாவின் இராணுவ புயபலத்தை கண்டதுமே விடுதலைப் புலிகள் அடங்கி ஒடுங்கி விடுவார்கள் அல்லது அடக்கி ஒடுக்கிவிட முடியும் என்பதே அவரது அன்றைய சித்தாந்தமாக இருந்தது.

ஆனால், நாட்கணக்கில் முடியுமென எதிர்பார்த்த போர் வாரங்களாகி, மாதங்களாகி, வருடங்கள் ஆகிய போதுதான் வெல்ல முடியாத போர் என்பதை இந்தியாவும், டிக்சிற்றும் தெளிவாகப் புரிந்து கொண்டனர். இந்நிலையிலேயே அவமானகரமாக இலங்கையில் இருந்தும் வெளியேற வேண்டி ஏற்பட்டது. ஆனால், அன்று அதை ஒப்புக்கொள்ளாத டிக்சிற தற்பொழுது பதவி ஓய்வு பெற்ற பின்னர் இதை ஏற்றுக் கொண்டுள்ளார். இது ஒரு காலம் தாழ்த்திய வெளிப்பாடாக இருப்பினும், யதார்த்தத்தை எவரும் நிராகரிக்க முடியாது என்பதன் ஒப்புதல் வாக்குமூலமாகும்.

ஆனால், திரு. டிக்சிற்றின் இவ் அறிவிப்பானது ஓய்வு பெற்றதின் பின்னதாக இருப்பினும் இந்தியாவின் அதிகாரிகள் மட்டத்தில் இனப்பிரச்சினை ஓரளவேனும் சரியாகப் புரியப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது என்றே கொள்ள முடியும். ஆயினும் இந்தியாவின் அரசியல்வாதிகள் இலங்கையின் இனப்பிரச்சினையில் குளிர்காய முற்படுகையில் இவற்றால் எந்தளவிற்கு பயன் உண்டு என்பது கேள்விக்குரிய விடயமே.

# பாதுகாப்பை இழக்க முடியாது

## · இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு

(வாஷிங்டன்)

அராபியர்களை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதற்காக இஸ்ரேல் அதன் பாதுகாப்பு உரிமைகளை விட்டுக்கொடுக்க முடியாதுஎன்று இஸ்ரேல் பிரதமர் யிட்சாக் ரபீன் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் இஸ்ரேலியர் கலந்து கொண்ட முக்கிய கூட்டம் ஒன்றில் உரையாற்றிய பின்னர் ஜெருசலேம் நகரம் தொடர்ந்தும் இஸ்ரேலிய ஆட்சியிலேயே இருக்குமெனவும் தெரிவித்தார்.

ஏப்ரோன் பள்ளிவாசலில் இடம்பெற்ற படுகொலையைத் தொடர்ந்து முறிவடைந்திருக்கும் இஸ்ரேலிய அரபு சமாதானப் பேச்சுக்கள் டிசம்பர் 13இல் வாஷிங்டனில் கையெழுத்திடப்பட்ட உடன்பாடுகளின் அடிப்படையிலேயே பேச்சு நடத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அமெரிக்கா சென்றிருக்கும் இஸ்ரேலிய பிரதமர் ரபீன் வெளிவிவகார அமைச்சர் வாறன் கிறிஸ்தோபரையும், பாதுகாப்பு அமைச்சர் பில் பெரியரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இஸ்ரேலியபிரதமர் மேலும் கூறுகையில் ஏப்ரோன் மசூதிப் படுகொலை தொடர்பாக பெரும் வேதனையை வெளியிட்டதுடன் அமைதிப் பேச்சு தொடர்வதை இது பாதிக்கக் கூடாது எனவும் குறிப்பிட்டார், சுயாட்சி ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் விடயத்தில் பாலஸ்தீனியர்களுடன் ஒத்துழைக்க முடியும் என்றும் அமைதிப் பேச்சு தொடங்கப்படுவதற்கு முன்பு ஆக்கிரமிப்பு பகுதியில் பாலஸ்தீனியரின் பாதுகாப்பு குறித்து அமெரிக்கா ஆர்வம் காட்டுகிறது எனவும் தெரிவித்தார்.

இதனிடையே மத்திய கிழக்குப் பேச்சுவார்த்தையில் முக்கிய பங்கு பணியாற்றும்விருப்பத்தை வெளியிட்டுள்ள ரஷ்யாவின் தலைநகருக்கு இஸ்ரேலிய பிரதமரும் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தலைவர் யாசிர் அரபாத்தும் விரைவில் விஜயம் செய்யக்கூடுமெனவும் கூறப்படுகிறது.

# பாலத்தீனியர்பாதுகாப்பிற்கு அமெரிக்கா வலியுறுத்து

(வாசிங்டன்)

ஏப்ரோன் மசூதி இருக்கும் பகுதியை பாலஸ்தீனியர்களின் பாதுகாப்பில் விடவேண்டும் என்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கம் விடுத்த வேண்டுகோளை இஸ்ரேல் பரிசீலனை செய்யவேண்டும் என்று அமெரிக்கா வெளியுறவு அமைச்சர் வாறன்கிறிஸ்தோபர் இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ரபீனிடம் கோரிக்கை விடுத்தார்.

இத்தகவல் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையில் வெளியிடப்பட்டு உள்ளது மத்திய கிழக்கு பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வசதிசெய்யும் பொருட்டு வாசிங்டன் சென்றிருக்கும் இஸ்ரேலிய பிரதமரிடமே வாறன் கிறிஸ்தோபர் இதனைக்கோரியுள்ளார்

இதேவேளை, ஏப்ரோன் மசூதியில் இடம்பெற்ற படுகொலை தொடர்பாக இஸ்ரேலைக் கண்டிக்கும் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு நாளை நடத்தப்படவேண்டுமென ஐ நா பாதுகாப்பு சபை காலவரம்பு விதித்துள்ளது

மேலும் இஸ்ரேலின்ஆக்கிரமிப்பிற்குட்பட்டுள்ள காஸாப் பகுதியில், இஸ்ரேலிய இராணுவத்தினர் மீது தாக்குதல்நடத்தப்பட்டுள்ளது- இஸ்ரேல் இராணுவத்தினர் நடத்திய பதில் தாக்குதலில் பாலஸ்தீனியர்ஒருவர் கொல்லப்பட்டிருப்பதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

### தமிழக சட்டப் பேரவையில்

# தி.மு.கவின் இருஅணிகளும் தனித்தனியே செயற்படும்

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையில் உறுப்பினர்களாக இருக்கும் திரு பரிதி இளம்வழுதியும்திரு செல்வராசுவும், முறையே திராவிட முன்னேற்றக்கழகம் ஒன்று என்ற கட்சியையும் திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டு என்ற கட்சியையும் சேர்ந்தவர்களாகக் கருதப்படுவார்கள் என்று சட்டப் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா அறிவித்துள்ளார். இவ்விவகாரம் தொடர்பாக மூன்று பக்கங்களைக் கொண்ட அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் பேரவைத் தலைவர் அதில்மேலும்அ தி மு கவிலிருந்துவிலக்கப்பட்டமுன்னாள் அமைச்சர்களான அழகு திருநாவுக்கரசு, ஜி விசுவநாதன் போன்றோர் எந்தக் கட்சியையும் சேராதவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையகத்தின் முடிவு வெளியிடப்படும் வரையில் தமது அறிவிப்பு செல்லுபடியாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்,

# ஒன்பது சோமாலியர் பலி

(மொகாடிஸ்யூ)

ஐ. நாஅமைதிப்படையில் பங்கேற்று சோமாலியாவிற்கு சென்றுள்ள இந்திய இராணுவத்தினர் நேற்று அங்கு நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒன்பது சோமாலியர் உயிரிழந்துள்ளனர்

இந்திய இராணுவத்தினர் சென்ற வாகன மொன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும், இந்திய இராணுவம் எதிர்த்தாக்குதல் நடத்திய போதே இவர்கள் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகின்றது

சோமாலியாவில் இந்திய இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட முதலாவது பெரிய தாக்குதல் இதுவாகும் என்பதுகுறிப்பிடத்தக்கது இச்சம்பவத்தில்இந்தியஇராணுவதரப்பிலும் சிலர் காயமடைந்தும் சிலர் கொல்லப்பட்டும் இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

# தென்னாபிரிக்க மோதலில் 13 கறுப்பர்கள் பலி

(ஜோகானஸ்பார்க்)

தென்னாபிரிக்காவின் நெட்டால் மாகாணத்தில் நேற்று முன்தினம் கறுப்பர் இனத்தவரைச் சேர்ந்த பதின்மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர்

இன்னமும் ஆறுவாரங்களில் பொதுத்தேர்தல் இடம்பெற இருக்கும் இந்நாட்டில்மேலும் வன்முறை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

கொல்லப்பட்டவர்களில் நான்குபேர் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் அங்கத்தவர்கள் எனக் கூறப்படுகிறது இதே வேளை நெட்டால் மாகாணத்தில் அரசியல் கொலைகள் அதிகரிப்பதை தடுக்கும் முகமாக சூலு மன்னருடன்பேச்சு நடத்த ஆபிரிக்கா தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா முன்வந்துள்ளார்

# ஆக்கபூர்வ எதிர்க்கட்சியாக காங்கிரஸ் செயற்படும்

## சட்டமன்றத் தலைவர் தெரிவிப்பு

(சென்னை)

சட்டப் பேரவையில் ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக காங்கிரஸ் கட்சி செயற்படும் என்று இக்கட்சியின் சட்டமன்றத் தலைவரானஎஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கூறியுள்ளார்

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றஉறுப்பினர்கள் கூட்டத்தை தொடர்ந்து செய்தியாளர்கள் மத்தியில் பேசியஅவர் மேலும் கூறுகையில், விலைவாசி உயர்வு, மின்கட்டண உயர்வு தொழில்துறை தேக்கம், சட்டம் ஒழுங்கு நிலை ஆகியவை உட்பட பல்வேறு பிரச்சினைகளை காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்டசபையின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள் எனத் தெரிவித்தார்

# 1993 இல் விமான விபத்துக்கள்

1993ஆம் ஆண்டில் அதிகமான விமான விபத்துகள் நடைபெற்றுள்ளதாக சர்வதேச விமானப்போக்குவரத்து அமைப்பு தெரிவித்துள்ளது, 1992இல் 29 விபத்துகள் நடந்தன. இது 1993 இல் 34 ஆக அதிகரித்தது. 1992 விபத்துகளினால் 1,097 பயணிகள் பலியாகினர்: எனினும் 1993 விபத்துகளில் 936 பயணிகளே பலியாகினர்-

# வங்கியாளர் பரீட்சை பெறுபேறுகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட வங்கியாளர் பரீட்சையின் பெறுபேறுகள் வந்துசேர்ந்துள்ளன.

இடைநிலைப் பரீட்சை மற்றும் இறுதிப் பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகளே எடுத்துவரப்பட்டுள்ளன இவற்றை இலங்கை வங்கியின் யாழ் மாவட்ட முகாமையாளர் தம்முடன் எடுத்து வந்துள்ளார்.

இதற்குரிய மற்றைய பரீட்சை எதிர்வரும் யூன்மாதம் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டது. (பா, தி)

# க.பொ.த. (உ) பரீட்சை; பாடத்திற்கு ரூ. 50 கட்டணம்

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான ஒரு பாடத்திற்குத் தோற்றுவதற்கான பரீட்சைக் கட்டணம் ஐம்பது ரூபாய் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல் சுற்று நிருபமொன்று சகல மாவட்ட கல்வித் திணைக்களங்களுக்கும் பரீட்சைத் திணைக்களம் அனுப்பி வைத்துள்ளது.

இதன்படி ஒரு பாடத்திற்கு 50 ரூபாவும் இரண்டு பாடத்திற்கு 100 ரூபாவும், மூன்று பாடத்திற்கு 150 ரூபாவும், நான்கு பாடத்திற்கு 200 ரூபாவும் பரீட்சை கட்டணமாக செலுத்தப்படல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# விருப்புரிமையை மாற்ற விண்ணப்பிக்க முடியும்

- அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசின் கீழ் பொது எழுதுநர் சேவைக்கும் அதனோடிணைந்த சேவைகளுக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இறுதியாக நடாத்தப்பட்ட பொதுப்போட்டிப்பரீட்சையில் அரச கூட்டுத் தாபனங்கள் நியதிச் சட்ட சபைகள் நீதித்துறைச் சேவைகள் முதலியவற்றுக்குவிருப்புரிமை தெரிவித்துள்ள பரீட்சார்த்திகள் அவ்விருப்புரிமையை மாற்றிக் கொள்ள விரும்பினால் அவ்வித விருப்புரிமை மாற்றம் பற்றி சம்பந்தப்பட்ட பகுதியினருக்கு அறிவிப்பதன் மூலம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என மந்திரி சபைத் தீர்மானம் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தகவலை யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார் (தி

க.பொ.த. சாதாரணபரீட்சை;

# மின்சக்தி, எரிபொருள்; பாடவிதானங்கள் இணைப்பு

மின்சக்தி எரிபொருள் பாவனையுடன் தொடர்பான இரு வினாக்களை க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையின் மனையியல், விஞ்ஞானம், சமூகக்கல்வி பாடங்களில் சேர்ப்பதற்கு இலங்கை மின்சக்தி எரிபொருள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த இரு வினாக்களை இணைப்பது தொடர்பாக மேற்படி அமைச்சு கல்வி அமைச்சோடு பேச்சுக்களை நடத்தியுள்ளது.

# இரண்டாம்முறைதிருமணம் நபருக்கு அபராதம்

(தென்மராட்சி)

கைதடி வடக்கு கைதடியைச் சேர்ந்த நபர் ஒருவர் ஏற்கனவே சட்டப்படி திருமண வலுவுடையதாக இருக்க... சிறைத் தண்டனையும் கட்டும்படிமன்று தீர்ப்பளித்தது. அபராதம் கட்டத் தவறின் 160நாட் சிறைத் தண்டனை வழங்கப்படும் என

# அ. தி. மு. கவிடம் இருந்து தமிழகத்தைக் காப்பாற்றுங்கள்

## எதிர்க்கட்சிகள் மத்திய அரசிற்கு மகஜர்

(சென்னை)

அ.தி.மு.க அரசிடமிருந்தும் விடுதலைப்புலிகளிடமிருந்தும் தமிழ்நாட்டைக் காக்குமாறு காங்கிரஸ் கட்சி தலைமையிலான சில எதிர்கட்சிகள் மத்திய அரசுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளன.

37 ஊழல் குற்றச்சாட்டுக்கள், மற்றும் தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதன் காரணத்தால் ஜெயலலிதா அரசை கலைக்கும்படி காங்கிரஸ் தலைமையில் ஆறு எதிர்க்கட்சிகளும் ஆறு முன்னாள் அ.தி.மு.க உறுப்பினர்களும் நேற்று மாலை மத்திய அரசை மகஜர் மூலம் கோரினர் இம்மகஜரை அவர்கள் ஊர்வலமாக சென்று தமிழக ஆளுநரிடம் கையளித்தனர்.

விடுதலைப்புலிகள் பேச்சாளரான அன்ரன் பாலசிங்கம் அண்மையில் இருதடவை சென்னைவந்து ஜெயலலிதாவை சந்தித்ததாகவும் ஐ.ஜி.பி மட்டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரி ஒருவர் புலிகளுக்கு உதவுவதாகவும் புலிகளின் புலனாய்வுப் பிரிவுத்தலைவர் பொட்டம்மானும் உயர் தலைவர் பேபி சுப்பிரமணியமும் சென்னையில் இருப்பதாக கூறப்படுவதாகவும் இம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புலிகளின் நடவடிக்கைகள் மாநில பொலிசாருக்குத் தெரியும் ஆனால் இதை தடுத்து நிறுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் கடந்த செப்டம்பர் மாதம் 10 புலிகள் சாந்தோமில் பொலிசாரல் கைது செய்யப்பட்டனர், இவர்களில் சாந்தன் என்பவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் மேலும் இருவர் மதுராந்தக துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்பானவர்கள் எனவும் இம்மகஜரில் தெரிவிக்கப்படுகிறது:

இந்தப் பத்துப் பேரும் கைதான விடயம் இரகசியமாக வைக்கப்பட்டு இவர்கள் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும் கூறும் இம்மனுவில் அ.தி.மு.க அரசின் ஊழல்கள் பலவும் குறிப்பிடப்பட்டுள்ளது இதில் காங்கிரஸ்,ஜனதாக் கட்சி எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. முஸ்லிம் லீக், கிறிஸ்தவ முன்னேற்றக் கழகம், கிறிஸ்தவஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் தலைவர்களும் அ.தி.மு.கவின் முன்னாள் அமைச்சர்கள் கே.ராஜாராம் ஜி. விஸ்வநாதன், அழகு திருநாவுக்கரசு ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

# அரசியலமைப்பு மாற்றம்; இ.தொ.கா. ஒத்துழைக்காது

(லண்டன்)

சிறிலங்கா ஜனாதிபதி வெளியிட்டுள்ள அரசியல் அமைப்பு மாற்றம் தொடர்பாக தமது கட்சியான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நேரடியாக ஒத்துழைப்பை வழங்கப் போவதில்லை என இந்து கலாசார இராஜாங்க அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினருமான தேவராஜ் தெரிவித்துள்ளார்

அண்மையில் லண்டன் விஜயமொன்றை மேற்கொண்ட போது பி.பி.ஸி சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் மேற்படி கருத்தை தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் தேர்தல் காலத்தில் ஜனாதிபதி தெரிவிக்கும் கருத்தை முழுமையான அவரின் கருத்தாக கொள்ள முடியாது எனவே அவர் வடக்கு கிழக்கு பகுதியில் இருப்பது பயங்கரவாதம் என கூறுவதை இதே அடிப்படையிலே கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு இனப்பிரச்சினை இருப்பதாக ஏற்று கொண்டு இருப்பதாகவும் அதனை தீர்ப்பதற்கான நடவடிக்கையை அவர் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

# கூட்டுடன் கோழி திருடிய நால்வருக்குச் சிறை

(மல்லாகம்)

கூட்டுடன் கோழிகளைக் களவாடிய நால்வருக்கு தலா ஐந்நூறு ரூபா வீதமும் ஒருமாதச் சிறைத்தண்டனையும் சுன்னாகம் மாவட்ட நீதிமன்றினால் விதிக்கப்பட்டது. ரூபா 3800 பெறுமதியான கோழிகளை மானிப்பாய், கட்டுடை அரசடி வீதியிலுள்ள ஒரு வீட்டிலிருந்து கூட்டுடன் களவாடியமைக்காக இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அபராதம் கட்டத் தவறின் மேலும் ஒரு மாதம் சிறைத் தண்டனை வழங்கப்படுமெனவும் தீர்ப்பிடப்பட்டுள்ளது (09)

# சட்டசபைக்கு வந்த ஆளுநரை ஜெயலலிதா வரவேற்கவில்லை

## ஆளுநர் - முதல்வர் மோதல் அதிகரிப்பு

(சென்னை)

தமிழக ஆளுநர் சென்னா ரெட்டிக்கும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் இடையில் மோதல் நிலை அதிகரித்து வருவது நேற்றைய தமிழக அரசின் ... போல் தனது சட்டசபை உரை ஆற்ற வருகை தந்த போது அவரை வரவேற்க முன் மூப்பில் ஜெயலலிதா சமுகமளிக்கவில்லை. ஆளுநரை சபாநாயகரே அழைத்துச் ... முகமன்கூறி வரவேற்றனர்.

ஆளுநர் தனது உரையை முடித்து வெளியேற விடைபெற்றபோதும் ஜெயலலிதாவோ அல்லது அவரது அமைச்சர்களோ விடைகூறி அனுப்ப ...

# 200கோடி ரூபா செலவில் வெளிநாட்டுதூதுவர்களுக்கு ஆடம்பர வீடுகள்

(கொழும்பு)

கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தன புரத்திலுள்ள பாராளுமன்றப் பகுதியில் 200கோடி ரூபா வெளிநாட்டு மூலதனத்துடன் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கான குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

இந்தக் குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான உடன்படிக்கை ஒன்றை இலங்கை முதலீட்டுச்சபை, அமன்டாரி டெவலப்பர்ஸ் பிறைவேட் லிமிட்டட் நிறுவனத்தில் செய்துகொண்டது வெளிநாட்டுத் தூதுவர்களுக்கென ஆடம்பர வீடுகள் 4 கோடி அமெரிக்க டாலர்கள் செலவில் கட்டப்படவுள்ளது. அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளில் உள்ளதைப்போன்று வெளிநாடுகளின் தூதுவர்களுக்கான ஆடம்பர வீடுகள் கட்டப்படவுள்ளன.

இந்த வீடுகளை வடிவமைப்பதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்களின் உதவிகள் பெறப்பட உள்ளதாகவும் 30ஏக்கர் நிலத்தில் இந்த ஆடம்பர வீடுகள் கட்டப்படவுள்ளனவாம். இந்த நவீன ஆடம்பர வீடமைப்புத் தொகுதியில் நீச்சல் தடாகங்கள், நீர் விளையாட்டுக்கள், தேகப்பயிற்சி நிலையம், சுப்பர் மாக்கற்றுக்கள் போன்ற வசதிகள் அமைக்கப்படவுள்ளன.

# பரிசளிப்பு

(வடமராட்சி)

கிராம மட்டத்திலான வீட்டுத் தோட்டப் போட்டி பரிசளிப்பு விழா நாளை பொலிகண்டி பாலாவி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் பிற்பகல் 3.15 மணியளவில் நடைபெறவுள்ளது.

# இணைப்புக் கல்லூரிக்கு பணிப்பாளராக மூக்கையா

வடக்குப் பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரியின் புதிய பணிப்பாளராக பேராசிரியர் மூக்கையா நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் மூக்கையா இதற்கு முன்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க) (நி)

# ரின்னர் அருந்தி தற்கொலை மந்துவில்பகுதியில் சம்பவம்

(தென்மராட்சி)

ஆறு பிள்ளைகளின் தந்தை ஒருவர் ரின்னர் எனப்படும் திராவகத்தை அருந்தி மரணத்தை தழுவிக் கொண்டுள்ளார்.

கொடிகாமம் மந்துவில் பகுதியைச்சேர்ந்த குணரத்தினம் (35 வயது) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர் ஆவார். சில வாரங்களுக்கு முன்பு இவரது தந்தையார் மரணமானதை தொடர்ந்து இவர் விரக்தியடைந்த நிலையில் காணப்பட்டதாகவும், சில தினங்களுக்கு முன்பு மந்துவில் பொதுச்சந்தைப் பகுதியில் வைத்து ஒரு போத்தல் ரின்னர் திராவகத்தை அருந்தியதாகவும், மயக்கமுற்ற நிலையில் அவர் உடனடியாக சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. (86)

# புத்தளம்

தாக்குதலில் ஐந்து மீனவர்கட பலியானதாகவும் அவர்களின் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன தாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் குனதுங்க தெரிவித்தார்

பத்தலங் குன்ற எனும் மீன்பிடிக்கிராமம் அருகே இச்சம்பவம் நடைபெற்றது இதில் மேலும் 5மீனவர்கள் காயமடைந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்

ஏற்கனவே சட்டப்படி திருமண வலுவுடையதாக இருக்கையில் அத் திருமணத்தினை விவாகரத்துப் பெறாமல் அதே இடத்தைச் சேர்ந்த 18 வயது பூர்த்தி அடையாத ஒருவரை இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்தமைக்காக தமிழீழ சட்டக் கோவையின் 4-ம் பிரிவின் இருதாரமணம் என்ற குற்றத்தின் கீழ் 4000ரூபா அபராதமும் ஒரு மாத கட்டாய

---

றின் 160நாட் சிறைத் தண்டனை வழங்கப்படும் எனவும் தீர்ப்பளித்தது. (86)

---

### எறிகணை

டது பலாலி முகாமிலிருந்து வளலாய்ப் பகுதி மீதும் ஆட்லறிகள் சில வீழ்ந்துவெடித்தன எனினும் சேதங்கள் ஏற்பட்டதாகத் தகவல் கிடைக்கவில்லை

வடமராட்சி வடக்குக்கடற்பரப்பிலும் கடற்படையினரின் ரோந்துப்படகு நேற்றுக் காலை 10 மணியளவில் காணப்பட்டது கடைக்காடு பகுதியிலிருந்து காங்கேசன் துறை நோக்கி விசைப்படகு விரைந்து சென்றது (யோ)

---

### யாழ். மாவட்ட

ஆகவும் சாவகச்சேரி -47 ஆகவும், பருத்தித்துறை - 50 ஆகவும், தெல்லிப்பழை - 49 ஆகவும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது (பா)

---

நிலை அதிகரித்து வருவது நேற்றைய தமிழக அரசின் வரவு-செலவு கூட்டத் தொடரின் ஆரம்ப நாளில் தெரிந்தது.

நேற்று ஆளுநர் வழமை சமூகமளிக்கவில்லை. ஆளுநரை சபாநாயகரே அழைத்துச் சென்றார். ஆளுநர் மண்டபத்தில் நுழைந்தும் முதலமைச்சர் ஜெயலலிதாவை தவிர ஏனையோர் எவருக்கு

வோ அல்லது அவரது அமைச்சர்களோ விடைகூறி அனுப்ப முன்வரவில்லை.

---

# மரண வீடுகளுக்குச் செல்லும் தென் மாகாண வேட்பாளர்

(கொழும்பு)

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள தென் மாகாண சபைத் தேர்தலில் வாக்காளர்களைத் தம்பக்கம் இழுக்க வேட்பாளர்கள் பல முறைகளில் முனைந்து வருகின்றனர். இந்த வகையில் தற்போது தென் மாகாணத்தில் மரண வீடுகளுக்கும் அரசியல் கட்சி உறுப்பினர்கள் சமுகமளித்துவருகின்றனர்

மரண வீட்டில் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் உறவினர்களைத் தேற்றுவதிலும் மரணமடைந்தவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதிலும் இந்த அரசியல் கட்சி உறுப்பினர்கள் ஈடுபடுகின்றனர். இதில் சில வேட்பாளர்கள் மரண ஊர்வலத்தில் பங்குபற்றி மயானம் வரை சென்று இறுதிக் கிரியைகளிலும் கலந்துகொள்கின்றனர் அனுதாப உரைகளும் நிகழ்த்துகின்றனர்.

இந்தத் திடீர் அனுதாபம் வாக்கு வேட்டையை அடிப்படையாகக்கொண்டதேன இப்பகுதியில் பேசிக்கொள்ளப்படுகிறது

---

### யாழ்

ஆணைக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்டுள்ளார் என்று மானியங்கள் ஆணைக்குழு அலுவலகத்திலிருந்து உத்தியோகப் பற்றற்ற முறையில் எமக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

பேராசிரியர் குணரட்ணம் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிப்பதற்கான மேற்படி சிபார்சை மீண்டும் உறுதிப்படுத்துவதற்காக இம்மாத இறுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கூடவிருக்கிறது. இக்கூட்டத்தில் இச்சிபார்சு உறுதிப்படுத்தப்பட்டபின்னர் இவ்விடயம் குறித்து ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படும் என்றும் அதன் பின்னர் நியமனம் வழங்கப்படும் என்றும் கூறப்படுகிறது. (ஈ.நி)

---

## தொழில் நுட்ப கல்வி

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப கல்வி பயில புதிதாக தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர், விலாசங்களுடன் மேலதிக தகவல்களும் கிடைத்துள்ளன. இதனைப் பார்வையிட விரும்புபவர்கள் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய விளம்பரப் பலகையை நாடுமாறு ஒன்றியத் தலைவர் கோரியுள்ளார்.

---

### ஏப்ரல்

சங்கத் தலைவர் வண' ஆனந்ததேரோ தெரிவித்தார். மாகாண சபைகளின் கீழ் உள்ள தாதிகள் சேவை மத்திய சுகாதார அமைச்சுக்கு மாற்றப்பட வேண்டும் என்பதே சங்கத்தின் பிரதான கோரிக்கையாகும். வேலை நேரத்தை வாரத்துக்கு 35 மணித்தியாலங்களாகக் குறைத்தல், தாதிகள் பயிற்சிப் பாடசாலைகளைக் கல்வி அமைச்சின் மேற்பார்வையில் பல்கலைக் கழகங்களுடன் இணைத்தல் மற்றும் புதிய சம்பளத் திட்டத்தை அமுல்படுத்தல் ஏனைய கோரிக்கைகளாகும்

---

## மெய்வல்லுநர் போட்டி

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி. ப. 2-00 மணியளவில் பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் திரு. ஆ. க. ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தன் அவர்கள் பிரதம விருந்தினராகவும், சங்கானைக் கல்விக் கோட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. மு. முருகன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

கண்டி வீதி அரியாலையில் இயங்கி வரும் சரம்பன் சண்முகநாதன் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு அரியாலை திறந்த வெளி மைதானத்தில் நடைபெறும். வித்தியாலய அதிபர் திரு. வ. நிமலநாதன் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வேலணை ஊர்காவற்றுறை கோட்ட பிரதி கல்விப் பணிப்பாளர் திரு நா. சுந்தரலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக விடுதலைப் புலிகளின் தீவகக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. செம்மணன், தீவகக் கோட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி நாமகள் ஆகியோர் கலந்துகொள்வார்கள். சர்வானந்தா (நீலம்), மகாதேவா (பச்சை), விவேகானந்தா (சிவப்பு) ஆகிய இல்லங்களுக்கிடையே போட்டிகள் நடைபெறும். (22)

---

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சின்னத்தம்பி

(கொல்லன்கலட்டி உடையார்)

கொல்லன்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது இடம் பெயர்ந்து மூளாய், நல்லூர், அளவெட்டி பெருமாக் கடவைப் பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் வசித்தவருமாகிய கந்தையா சின்னத்தம்பி (இளைப்பாறிய சிறாப்பர் நில அளவை இலாகா) 16-03-1994 இல் காலமாகிவிட்டார். அன்னார் சௌபாக்கியவதியின் அன்புக் கணவரும், சிவலோகநாதன், சதிர்காமநாதன் Sey Lan Bank Colombo) சத்தியலோகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திலகவதி, சற்குணநாயகி ஆகியோரின் அன்பு மாமனும் கார்த்திகாலஷ்மி சிறீலஷ்மி ஆகியோரின் அன்புப் பேரனும் ப. குலனின் பூட்டனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை அளவெட்டி பெருமாக்கடவை பிள்ளையார் கோவில் வீதியிலுள்ள இல்லத்தில் இன்று 17-03-1994 வியாழன் காலை 8 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

'குமாரகிரி' — சி. சத்தியலோகநாதன் (மகன்)<br>
பெருமாக் கடவை — (பவளம்)<br>
அளவெட்டி தெற்கு. — க. சிவநாதன் (பெறாமகன்)<br>
(7772) — (தம்பா)

## அப்புத்துரை தம்பிஐயா

(இளைப்பாறிய ஊழியர் தொலைத்தொடர்புத் திணைக்களம்)

அரியாலையைச் சேர்ந்த அப்புத்துரை தம்பிஐயா (16-03-94) நேற்று காலமாகிவிட்டார். இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சிற்றம்பலம், சரோஜினி, சுந்தரலிங்கம் (யாழ். மாநகரசபை), சந்திராதேவி, வரதராசா, ஜெயசோதி, வசந்தா, ரகுநாதி ஆகியோரின் அன்புத் தந்தையும், பாக்கியம் அழகம்மாவின் அன்புச் சகோதரரும், த. சுந்தரலிங்கம் (காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை), புவனேஸ்வரி, தனபாலசம்பந்தர், புவனேஸ்வரி, கனகலிங்கம், அ. தேவராசா, சுரேந்தினி ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (17-03-94) பி ப. 4-00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

150, நெடுங்குளம் வீதி,<br>
அரியாலை,<br>
யாழ்ப்பாணம்.<br>
(7778)

தகவல்:<br>
த. சுந்தரலிங்கம்<br>
(மருமகன்)

---

# நன்றி கூறுகிறோம்

## எனது சகோதரி செல்வி
## சிவசங்கரன் சிவசக்தி

அவர்களின் அகால மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தும் அனுதாபச் செய்திகளை விடுத்தும் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியும் அது சம்பந்தமான ஏற்பாடுகளில் ஒத்துழைத்தும் உதவி புரிந்த அன்பர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் மற்றும் வர்த்தகப் பெருமக்களுக்கு உளப் பூர்வமாக நன்றி தெரிவிக்கின்றேன்.

எமது சகோதரியின் மறைவுவேளை எமக்கு தங்கள் சேவைகளை வழங்கிய தமிழீழ காவல் துறையினர், சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி டாக்டர்கள் ஊழியர்கள் ஆகியோருக்கும், மறைவுக்கு அஞ்சலி செலுத்தி தமது நிறுவனங்களையும் கடைகளையும் மூடிய திருநெல்வேலி வர்த்தகர், பிரமுகர்களுக்கும் மற்றும் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் ஊழியர்கள் ஆகியோரிற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கணேசன்

(7777) (கணேசன் களஞ்சியம் திருநெல்வேலி)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81ஆம் இலக்கத்தில் உள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.